பக்கங்கள் 27

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | பங்குனி 22 சனிக்கிழமை 05.04.2025 | அதிர்வு 243

## இந்தியாவைப் பகைத்தால் மோசமான நிலை ஏற்படும்

### அரசுக்கு ராஜித எச்சரிக்கை



“அதானியின் ஒரு பில்லியன் முதலீட்டை இழந்தமை அரசு இழைத்த பாரிய தவறாகும்.

03




# இலங்கை வந்தார் இந்தியப் பிரதமர்

### இன்று சுதந்திர சதுக்கத்தில் பெரும் வரவேற்புக்கு ஏற்பாடு

இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நேற்று இரவு 8.33 மணியளவில் நாட்டை வந்தடைந்துள்ளார்.

தாய்லாந்தின் தலைநகர் பாங்கொக்கில் இடம்பெற்ற பிம்ஸ்டெக் மாநாட்டில் கலந்துகொண்டுவிட்டு அங்கிருந்து இலங்கைக்கான 3 நாள் உத்தியோகபூர்வ விஜயமாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

06



# பொருளாதாரம் மீண்டும் வீழ்ந்தால் இலங்கை தாங்காது! மோடியின் கரங்களை இறுகப் பற்றி கரையேற வேண்டும்!!



### அநுரவுக்கு மனோ இப்படி அறிவுரை

இலங்கையின் ஏற்றுமதியில் அதிக பங்கான 25 சதவீதத்தை இறக்குமதி செய்யும் அமெரிக்க நாட்டின் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் புதிய வரி விதிப்பின் பின்னரான நிலைமையின் பாரதூரத்தை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உணர வேண்டும் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. வலியுறுத்தியுள்ளார்.

“இது பழைய இடதுசாரி அரசியல் செய்யும் நேரமில்லை. மீண்டும் ஒரு பொருளாதார வீழ்ச்சி யுகத்தை நம் நாடு தாங்காது. தொழில் துறை முடங்கி, வர்த்தகம் வீழ்ச்சி அடைந்து, பண புழக்கம் குறைய விடக் கூடாது.”

05




உள்ளூராட்சித் தேர்தல் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டமையை ஆட்சேபித்துத் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களின் மீது மேன்முறையீட்டு நீதிமன்றமும் உயர்நீதிமன்றமும் முரண்பாடான தீர்ப்புகளை நேற்று வழங்கி இருப்பதால் இவ்விடயத்தில் நெருக்கடி இன்னும் முற்றி இருக்கின்றது.

அடுத்த கட்டச் சட்டச் சமா இரண்டு நீதிமன்றங்களிலும் கட்டவிழும் சாத்தியம் தென்படுகின்றது.

உயர் நீதிமன்றம் நேற்று தேர்தல் ஆட்சேபனை தொடர்பாக தனக்கு முன்னால் சமர்ப்பிக்கப்பட்ட 53 ரிட் மனுக்கள் தொடர்பாகவும் ஆறு அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தொடர்பாகவும் தீர்ப்பளித்து இருக்கின்றது.

விளக்கத்திற்காக இரண்டு விடயங்களையும் ஒட்டிய தீர்ப்புகளை தனித் தனியாக நோக்குவது நல்லது.

இந்தத் தேர்தல் ஆட்சேபனை ரிட் மனுக்கள் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டதும், சட்டமா அதிபர் தரப்பு அது தொடர்பில் பூர்வாங்க ஆட்சேபனை ஒன்றைக் கிளப்பியது. தேர்தல் ஆணையத்துக்கு எதிரான ரிட் மனு மட்டுமே உயர் நீதிமன்றத்துக்கு வரலாம், ஆனால் இந்த மனுக்கள் மாவட்ட தெரிவித்தாட்சி அலுவலர்களின் முடிவுகளுக்கு எதிரான மனுக்கள் என்பதால் அவற்றை மேன்முறையீட்டு நீதிமன்றத்திலேயே சமர்ப்பிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை தேர்தல் ஆணையத்தின் சார்பில் சட்டமா அதிபர் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

நேற்றுத் தீர்ப்பு வழங்கிய உயர் நீதிமன்றம் அந்தப் பூர்வாங்க ஆட்சேபனையை ஏற்றுக்கொண்டு அதன் அடிப்படையில் தனக்கு

02

# முதலாம் பக்கத் தொடர்ச்சி

**இரகசியம் பரகசியம்...**

முன்னால் தாக்கல் செய்யப்பட்ட 53 ரிட் மனுக்களையும் தள்ளுபடி செய்திருக்கின்றது.

இந்தக் காரணத்துக்காக ரிட் மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கின்றமையால், தாங்கள் உரிய நிவாரணம் தேடி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மீண்டும் ரிட் மனுக்கள் மூலம் உரிய நிவாரணத்துக்கு விண்ணப்பிக்கலாம் என்று ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டணி உட்பட்ட கட்சிகள் தீர்மானித்திருக்கின்றன என்று தெரிகின்றது. அதனால் அவை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நிவாரணம் கேட்டு மீண்டும் மனுக்களை தாக்கல் செய்யலாம் எனவும் தெரிகின்றது.

ஆனால், அதே சமயம் தேர்தல் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டமையை ஆட்சேபித்து உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த ஆறு அடிப்படை உரிமை மீறல் மனுக்களையும் விசாரித்து நேற்று தீர்ப்பு வழங்கியிருந்தது அந்த மன்று.

அந்தத் தீர்ப்பில் வேட்பு மனுவோடு சமர்ப்பிக்கப்பட வேண்டிய பிறப்புச் சான்றிதழ் பிரதி பற்றி தெளிவான வழிகாட்டுதலை – திட்டவட்டமான முடிவை – உயர் நீதிமன்றம் வெளிப்படுத்தி இருக்கின்றது. பிரதேச செயலகங்கள் மூலம் வழங்கப்படும் பிறப்புச் சான்றிதழ் பிரதியில் மாவட்ட பதிவாளரின் ஒப்பம் பதிந்த மூலப்பிரதி வேட்பு மனுவோடு தாக்கல் செய்யப்பட வேண்டும் என்ற தேர்தல் ஆணையத்தின் நிலைப்பாட்டை உயர் நீதிமன்றம் இந்த அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் மீதான தீர்ப்பில் தெளிவாக உறுதிப்படுத்தி இருக்கின்றது.

ஆயினும், நேற்று மாலை உயர் நீதிமன்றம் மேற்படி அடிப்படை உரிமை மீறல் மனுக்களின் வழக்கில் தீர்ப்பு வழங்குவதற்கு முன்னதாக, நேற்றுக் காலை, மேன்முறையீட்டு நீதிமன்றம் அங்கு தாக்கல் செய்யப்பட்டிருந்த 37 ரிட் மனுக்களின் மீது வழங்கிய தீர்ப்பில் வேட்பு மனுக்களோடு சமர்ப்பிக்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ்களின் போட்டோ பிரதியில் சமாதான நீதிவான் உறுதிப்படுத்தி இருந்தால் அதனை ஏற்றுக் கொள்ளும்படி தெரிவித்திருந்தது.

ஆயினும் அதற்குப் பின்னர் நேற்று மாலையில் அந்த தீர்ப்புக்கு மாறான நிலைப்பாட்டை, உயர்நீதிமன்றம் திட்டவட்டமாகவும் தெளிவாகவும் வெளிப்படுத்தி இருக்கின்றது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்திலும் விட உயர் நீதிமன்றம் மேன்மையான நீதிமன்றம் என்பதால் இளம் வேட்பாளர்களின் வயதை உறுதிப்படுத்துவதற்கு வேட்பு மனுவோடு சமர்ப்பிக்கப்பட வேண்டிய பிறப்புச் சான்றிதழ் எது என்பது தொடர்பாக உயர் நீதிமன்றத்தின் முடிவே இறுதியானதாகும்.

அதனைக் கருத்தில் கொண்டு நேற்று காலையில் 37 ரிட் மனுக்கள் தொடர்பாக மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு எதிராக தேர்தல் ஆணையம் உயர் நீதிமன்றத்தில் மேன் முறையீடு செய்யப் போகின்றது என்பது தெளிவாகியுள்ளது.

ஆக, சங்கு கட்சியினரின் – ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணியினரின் – நிராகரிக்கப்பட்ட 10 வேட்பு மனுக்களுடனும் சமர்ப்பிக்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ்கள் உயர்நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவை என்பது ஓரளவு தெளிவாகி உள்ளது.

ஆகவே, நேற்று மாலை உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பின் பின்னர் – அதாவது அடிப்படை உரிமை மீறல் மனுக்களின் மீது உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் பிறப்புச் சான்றிதழ் பிரதி தொடர்பில் திட்டவட்டமான முடிவு தெரிவிக்கப்பட்ட பின்னர் – அந்த விடயத்தில் முரணான வாதத்தைக் கொண்ட சங்குக் கட்சியினர் இனிமேல் மேன்முறையீட்டு நீதிமன்றுக்குப் போய் சாதகமான தீர்ப்புப் பெறுவதற்கான வாய்ப்புகள் ரொம்பவும் குறைவு.

ஆயினும், தங்கள் தரப்பு வாதத்தை முன்வைத்து, அதை செவிமடுப்பதற்கான காலத்தை பெறுவதன் மூலம், அவர்கள் சம்பந்தப்பட்ட மேற்படி 10 உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களையும் நீதிமன்ற உத்தரவு மூலம் தாமதப்படுத்த செய்கின்ற வேலையை மாத்திரமே அவர்களால் எட்ட முடியும் – ஈட்ட முடியும் – என்று கருதலாம்.

* * *

உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த உள்ளூராட்சி தேர்தல் ஆட்சேபனை வழக்கு ஒன்று தொடர்பில் இடம்பெற்ற விடயங்களை நேற்றைய எனது பத்தியில் குறிப்பிட்டு இருந்தேன்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் அந்த மனுவை தாக்கல் செய்து வாதாடிய சட்டத்தரணி குமாரவடிவேல் குருபரன் தொடர்பிலும் அந்த மனு தொடர்பிலும் சில விடயங்களை சுட்டி இருந்தேன்.

நேற்று முன்தினம் மாலை வரை அந்த வழக்கு உயர் நீதிமன்றத்தில் நடந்து முடிந்திருந்த நிலையில் அன்று இரவே அது பற்றி எனது பத்தியில் எழுத வேண்டி இருந்ததால், குறுகிய கால அவகாசத்தில் ஒரு சில தகவல் பிழைகள் அதில இடம் பெற்றுள்ளன. அவற்றைத் திருத்துவது பொருத்தமானது என நினைக்கிறேன்.

முதலாவது – அது நான் குறிப்பிட்டமை போல பருத்துத்துறை நகர சபை சம்பந்தமான வழக்கு அல்ல. பருத்துத்துறை பிரதேச சபை தொடர்பான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மனு நிராகரிக்கப்பட்டமை தொடர்பான வழக்கு அது.

அடுத்தது – அதை ரிட் மனு என்று குறிப்பிட்டிருந்தேன். உயர் நீதிமன்றத்தில் அன்று தேர்தல் ஆட்சேபனை தொடர்பான ஐம்பதுக்கும் அதிகமான ரிட் மனுக்கள் எடுக்கப்பட்டிருந்தன. அத்தோடு வேட்பு மனு நிராகரிப்பு ஆட்சேபனை என்ற அடிப்படையில் ஆறு, ஏழு அடிப்படை உரிமை மீறல் மனுக்களும் நீதிமன்றத்தில் ஆராயப்பட்டன. சம்பந்தப்பட்ட வழக்கு அடிப்படை உரிமை மீறல் மனு சம்பந்தப்பட்டது. நான் நேற்று குறிப்பிட்டது போல அது ரிட் மனு அல்ல.

அடுத்தது – மூன்றாவது – அந்த வழக்கில் ஒரு வேட்பாளரின் ஆவணம் சம்பந்தமான மொழிபெயர்ப்பில் தவறு இழைக்கப்பட்டதே உயர் நீதிமன்றத்தை சீற்றமுறை வைத்ததாக நான் குறிப்பிட்டிருந்தேன். அது தவறு. முழு வேட்பு மனு தொடர்பான மொழிபெயர்ப்பிலேயே குளறுபடித்தனம் இடம்பெற்றிருக்கிறது.

பருத்தித்துறை பிரதேச சபைக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சமர்ப்பித்த வேட்பு மனுவின் ஆங்கில மொழிபெயர்ப்பு பிரதி அந்த அடிப்படை உரிமை மீறல் மனுவோடு இணைக்கப்பட்டிருந்தது.

உண்மையில் மூல வேட்பு மனுவில் வேட்பாளர்களின் பால்நிலை சம்பந்தமான – ஆணா, பெண்ணா என்ற பகுதி – அட்டவணை முழுமையாக நிரப்பப்படாமல் விடப்பட்டு இருந்திருக்கிறது. அதன் காரணமாகவே அந்த வேட்பு மனுவை மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர் ஏற்காமல் நிராகரித்திருந்திருக்கிறார். ஆனால் அந்த வேட்பு மனுவின் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்ட பிரதி என்று உயர் நீதிமன்றத்தில் தங்கள் அடிப்படை உரிமை மீறல் மனுவோடு தாக்கல் செய்த ஆவணத்தில், அந்தக் அட்டவணை முழுவதும் – ஆணா பெண்ணா என்பது தொடர்பான விடயம் – ஆங்கிலத்தில் முழுமையாக நிறைவு செய்யப்பட்டு இருந்தது. அதை நீதிமன்றம் அவதானித்த போதே மொழிபெயர்ப்பு ஆவணம் என்ற பெயரில் நீதிமன்றை பிழையாக வழிநடத்த முயற்சி எடுக்கப்பட்டுள்ளது என்ற சீற்றம் நீதியரசர்கள் மட்டத்தில் ஏற்பட்டிருக்கின்றது. அதன் அடிப்படையிலேயே உயர்நீதிமன்றம் விடயத்தில் காத்திரமான தண்டனை நடவடிக்கையை ஆராய முற்பட்டபோது, அந்த அடிப்படை உரிமை மீறல் மனுவையே மனுதாரர்கள் கை வாங்கி – விலக்கி – பிரச்சினை ஏற்படாமல் சுமுகமாகச் சமாளித்தனர் என்று தெரிகின்றது.

இந்த விடயத்தை நான் எழுதியமைக்காக ஒரு சட்டத்தரணியை நான் தயாராக வைத்திருப்பது நல்லது என சில தரப்பினர் முகநூல் ஊடாக எனக்கு ஆலோசனை தருகிறார்கள். நல்லது, இந்த விடயம் தொடர்பான எனது பத்தி குறிப்பிட்ட விவகாரங்களை உயர் நீதிமன்றத்தில் பரிசீலனை செய்வதற்கு நானும் தயாராகவே காத்து இருக்கிறேன்.

எது, எப்படியாயினும், இந்த மொழபெயர்ப்புக் குளறுபடியால் உயர் நீதிமன்றத்தில் இந்த வழக்கை கை வாங்க வேண்டிய நிலைமை மனுதாரர் தரப்பு சட்டத்தரணிகளுக்கு நேற்று முன்தினம் ஏற்பட்டிருந்தது. ஆனால், நேற்று ரிட் மனுக்களை ஒட்டி உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை அடுத்து, இந்த விவகாரத்தை – அதாவது பருத்துத்துறை பிரதேச சபைக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவை உயர் நீதிமன்றத்தில் வாபஸ் பெற வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாகிய இந்தத் தரப்பினர் – மீண்டும் இதே வழக்கை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்து நிவாரணம் கோரக்கூடிய வாய்ப்பு வந்திருப்பதை மறுப்பதற்கு இல்லை.

* * *

தமிழர் தரப்பில் பிரதான கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சி யாழ் மாவட்டத்தில் உள்ள 17 உள்ளூர் ஆட்சி சபைகளிலும் போட்டியிடும் தனது வேட்பாளர்களின் அறிமுகக் கூட்டத்தை நேற்று நல்லூர் இளங்கலைஞர் மன்ற மண்டபத்தில் நடத்தியது. அந்தக் கூட்டத்தில் ஒரு முக்கிய பிரமுகர் மிஸ்ஸிங்.

யாழ்ப்பாண மாவட்ட வேட்பாளர்களின் அறிமுக நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அக்கட்சியின் ஒரே ஒரு எம்.பியான சி-றிதரனை அந்த நிகழ்ச்சியில் காண முடியவில்லை. அவர் அந்தக் கூட்டத்தை பகிஷ்கரித்தார் என்று ஒரு தரப்பில் செய்-தி கசிந்தது. அது உண்மையாகவும் இருக்கலாம்.

யாழ் மாவட்டத்தில் ஏற்படக்கூடிய தேர்தல் பெறுபேறுகளுக்கு – வெற்றி, தோல்விகளுக்கு – தன்னை சம்பந்தப்படுத்தாமல், கட்சியின் பிற நிர்வாகிகளை நேரடியாக பொறுப்பேற்க வைக்கும் செயற்பாட்டின் ஓர் அங்கமாக இந்த நிகழ்ச்சித் தவிர்ப்பு நடவடிக்கை அமைந்திருக்கலாம் என்ற ஒரு பேச்சு கட்சியின் முக்கியஸ்தர்கள் மட்டத்தில் அடிபட்டதை இங்கு வாசகர்களுக்கு சுட்டிக் காட்டுவது சரியாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

# இந்தியாவுடன் திருட்டுத்தனமாகப் பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டால் அதனை அமுலாக்க இடமளிக்கமாட்டோம்

## அநுர அரசை மிரட்டுகின்றது முன்னிலை சோஷலிஸக் கட்சி

"இந்தியாவுடன் அரசு செய்யவுள்ள பாதுகாப்பு ஒப்பந்தம் நாடாளுமன்றத்துக்கும், அமைச்சரவைக்கும் தெரியாது. மக்களுக்கு அறிவுறுத்தாமல் திருட்டுத்தனமாகக் கைச்சாத்திடப்பட்டால் அதன் ஒரு உறுப்புரையையேனும் செயற்படுத்துவதற்கு இடமளிக்கமாட்டோம். அதற்கு எதிராக பாரிய மக்கள் அணியைத் திரட்டுவோம்."

– இவ்வாறு முன்னிலை சோஷலிஸக் கட்சியின் கல்விச் செயலாளர் புபுது ஜாகொட தெரிவித்தார்.

இந்தியாவுடன இலங்கை அரசு செய்துகொள்ளப்போவதாகத் தெரிவிக்கப்படும் பாதுகாப்பு தொடர்பான ஒப்பந்தம் தொடர்பில் மக்களுக்கு அறிவுறுத்துமாறு தெரிவித்து முன்னிலை சோஷலிஸக் கட்சி ஜனாதிபதி செயலகத்துக்கு மகஜர் ஒன்றைக் கையளித்தது. அதன் பின்னர் அங்கு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே புபுது ஜாகொட மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் குறிப்பிடுகையில்,

"1971ஆம் ஆண்டு ஏப்ரல் போராட்டத்தின் 54 ஆவது ஆண்டைக் கொண்டாடும் 2025 ஏப்ரல் 5ஆம் திகதி அன்று பிரதமர் நரேந்திர மோடியுடன் இலங்கை அரசு பல ஒப்பந்தங்களில் கைச்சாத்திட இருக்கின்றது. இந்த ஒப்பந்தங்கள் என்ன என இதுவரை நாட்டுக்கு வெளிப்படுத்தவில்லை.

மக்களுக்கு மாத்திரமல்ல நாடாளுமன்றத்துக்கும் அறிவிக்கவில்லை. நாங்கள் அறிந்த மட்டத்தில் அமைச்சரவைக்கும் ஒப்பந்தத்தின் நகல் பத்திரம் காட்டப்படவில்லை. அமைச்சரவை அமைச்சர்கள் எங்களுக்குப் பொய் சொல்கின்றார்கள் அல்லது இந்த ஒப்பந்தம் தொடர்பில் யாருக்கும் தெரியாது.



மக்களின் வாழ்க்கையைப் பாதிக்கும் முடிவுகளை எடுக்கும்போது, குறிப்பாக பல தலைமுறையினரைப் பாதிக்கும் முடிவுகளை எடுக்கும்போது மக்களிடம் கேட்க வேண்டும். இவ்வாறான ஒப்பந்தங்கள் சமூகமயப்படுத்தி கருத்தாடல் மேற்கொண்டு மக்கள் அபிப்பிராயத்துடன் அனுமதித்துக்கொள்ள வேண்டும்.

அவ்வாறு இல்லாவிட்டால் ஒப்பந்தத்தின் பிரதியை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பித்து விவாதிக்க வேண்டும். அவ்வாறு எதுவும் இல்லை. நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி அந்த ஒப்பந்தத்தைப் பார்க்கக்கூட கேட்பதில்லை.

ஐக்கிய மக்கள் சக்தி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசியக் கட்சி இந்தியாவுக்கு எதிராக வாய் திறப்பதில்லை. நாடாளுமன்றத்துக்குள் அரசும் எதிர்க்கட்சியும் இணைந்தே மக்கள் விரோதச் செயலை மேற்கொள்கின்றன.

அரசு அரசியல் கலாசாரத்தில் சிறந்த மாற்றத்தை ஏற்படுத்துவதாகத் தெரிவித்து அதனை முற்றாக நாடாளுமன்ற உறுப்பினர்களின் வாழ்வாதாரத்துக்கு மட்டுப்படுத்தியுள்ளது. அரசியல் கலாசாரம் என்பது இரண்டு வேளை பசியுடன் இருப்பதும் பஸ் மற்றும் ரயிலில் செல்வது மாத்திரமல்ல.

பாரதூரமான அரசியல் தீர்வுகளை மக்களுடன் கலந்துரையாடி மேற்கொள்வதும் சிறந்த அரசியல் கலாசாரத்துக்கு உரியதாகும். இன்று மக்கள் விடுதலை முன்னணி அரசியல் கலாசாரத்தை மாத்திரமல்ல அரசியலையும் குழப்பிக்கொண்டுள்ளது.

இந்த அரசு இந்தியாவுடன் கைச்சாத்திடவுள்ள பாதுகாப்பு ஒப்பந்தம் விளையாட்டு விடயமல்ல . இந்தியா யுத்த ஒத்துழைப்பு அமைப்பின் உறுப்பு நாடு.

இதற்கு மேலதிகமாக இந்தியா அமெரிக்காவுடன் பல பாதுகாப்பு ஒப்பந்தங்களில் இணைக்கப்பட்டிருக்கின்றது. இவ்வாறான சந்தர்ப்பத்திலேயே இந்தியாவுடன் இலங்கை பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடத் தீர்மானித்திருக்கின்றது.

ஏகாதிபத்தியவாதிகள், உலக வல்லரசு, பிராந்திய வல்லரசு நாடுகளுக்கு முன்னால் மண்டியிட்டு அழிவுகரமான ஏகாதிபத்திய யுத்தம் ஒன்றில் மரணிக்கும் தலையெழுத்தை இலங்கையர்களின் நெற்றியில் குத்தவே அரசு முயற்சிக்கின்றது. இது முற்றிலும் காட்டிக் கொடுப்பாகும்.

இந்தக் காட்டிக்கொடுப்புக்கு எதிராக மக்கள் சக்தி ஒன்றைக் கட்டியெழுப்புவோம். இந்தியாவுடன் அரசு கைச்சாத்திட இருக்கும் ஒப்பந்தங்களின் பிரதிகளை நாங்கள் கேட்டிருக்கின்றோம். அதனை மக்களுக்குக் காட்டாமல் திருட்டுத்தனமாக ஒப்பந்தம் கைச்சாத்திட்டால், அதன் ஒரு உறுப்புரையைக் கூட செயற்படுத்த முடியாத சக்தி ஒன்றைக் கட்டியெழுப்புவோம்." – என்றார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

### இந்தியாவை...

நட்பு நாடான இந்தியாவைப் பகைத்துக் கொண்டால் உக்ரைனை விட மோசமான நிலைமையே இலங்கைக்கும் ஏற்படும்."

– இவ்வாறு முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாத அரசு மக்களின் கவனத்தைத் திசை திருப்புவதற்காக ஒவ்வொருவராகக் கைது செய்து கொண்டிருக்கின்றது.

கோடிக்கணக்கில் கொள்ளையடித்தவர்களை விடுத்து, சில்லறை மோசடியாளர்களையே கைது செய்கின்றனர். தற்போது கைது செய்யப்படும் அனைவரும் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்படுகின்றனர்.

இவ்வாறு தடுத்து வைக்கப்படுவது முக்கியமல்ல. உரிய சாட்சிகள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு வழக்கு விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

குறிப்பாக பெரும்பாலான வழக்குகள் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக் காலத்தில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளை அடிப்படையாகக் கொண்டவையாகும்.

ஆளுங்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சாமர சம்பத் தசநாயக்க எம்.பியைச் சிறையில் அடைப்போம் எனக் கூறி, இரு தினங்களில் அவரைக் கைது செய்துள்ளார்கள்.

இவ்வாறு சட்ட நடவடிக்கைகள் அரசியல் ரீதியாக முன்னெடுக்கப்படும் எனில் அவை அங்கீகரிக்கக் கூடியவையல்ல. எதிராளிகளை அரசியல் ரீதியில் கைது செய்யும் கலாசாரம் ஆரம்பிக்கப்பட்டால் அது எதிர்காலத்திலும் தொடரும்.

ஆனால், எமது ஆட்சியில் இவ்வாறு எந்த நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை. இந்த அரசே தொடர்ச்சியாக ஆட்சியில் இருக்கப் போவதில்லை என்பதையும் இவர்கள் நினைவில் கொள்ள வேண்டும்.

கடன் மறுசீரமைப்பு, கடன் மீள் செலுத்தல், ட்ம்ப்பின் வரிக் கொள்கை என பாரதூரமான பிரச்சினைகள் முன்னிருக்கும் போது அரசு இவற்றில் ஆர்வமாக இருப்பது நாட்டின் எதிர்காலத்துக்கு ஆபத்தாகும்.

அதானி நிறுவனத்தின் ஒரு பில்லியன் டொலர் முதலீட்டை இழந்துவிட்டு எவ்வாறு இந்தியாவுடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் செய்து கொள்ள முடியும்? உக்ரைன் ரஷ்யாவுடன் மோதி, இன்று படு பாதாளத்தில் வீழ்ந்துள்ளது.

அதேபோன்று தான் இந்தியாவுடன் மோதினால் இலங்கையும் அழிவுப் பாதையில் செல்லும். நட்பு நாடுகளுடன் இராஜதந்திர உறவுகளை எவ்வாறு பேணுவது என்பதற்கு அனுபவம் தேவை. அது இந்த அரசுக்கு இல்லை." – என்றார்.

# இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தத்தில் இலங்கை கைச்சாத்திட்டால் சீனா கடும் அதிருப்தியடையுமாம்

## அரசை இப்படி எச்சரிக்கின்றார் வீரசேகர

“இந்தியாவுக்கும், சீனாவுக்கும் இடையில் அதிகாரப் போட்டித்தன்மை தீவிரமடைந்துள்ள பின்னணியில் இந்தியாவுடன் இலங்கை பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவது பிரச்சினைகளை ஏற்படுத்தும். இதனால் சீனா கடும் அதிருப்தியடையும். ஒரு நாட்டுக்காக ஏனைய நாடுகளை பகைத்துக்கொள்ளக் கூடாது.”

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ளார். அவரை அன்புடன் வரவேற்கின்றோம். இந்த விஜயத்தின்போது இலங்கைக்கும் இந்தியாவுக்கும் 6 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படவுள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது. இதில் பாதுகாப்பு தொடர்பில் முக்கிய விடயங்களை உள்ளடக்கிய வகையில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவுள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது.



இரு நாடுகளுக்கும் இடையில் கைச்சாத்திடப்படவுள்ள ஒப்பந்தங்கள் குறித்து நாடாளுமன்றத்துக்கும் நாட்டு மக்களுக்கும் அறிவிக்கப்படவில்லை. பாதுகாப்பு தொடர்பான ஒப்பந்தத்தின் நிபந்தனைகள் மற்றும் உள்ளடங்கங்கள் என்னவென்பதை அரசு பகிரங்கப்படுத்த வேண்டும். உண்மையை வெளிப்படுத்தாத வரையில் சாதாரண சந்தேகம் தோற்றம் பெறும்.

இலங்கை பிளவுப்படாத வெளிவிவகாரக் கொள்கையைக் கடைப்பிக்கின்ற நிலையில் பாதுகாப்பு தொடர்பில் ஒரு நாட்டுடன் மாத்திரம் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவது நாட்டின் வெளிவிவகாரக் கொள்கையைக் கேள்விக்குள்ளாக்கும்.

இந்தியாவுக்கும், சீனாவுக்கும் இடையில் அதிகாரப் போட்டித் தன்மை தீவிரமடைந்துள்ள பின்னணியில் இந்தியாவுடன் இலங்கை பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவது பிரச்சினைகளை ஏற்படுத்தும். இதனால் சீனா கடும் அதிருப்தியடையும்.

நாட்டின் இறையாண்மையைப் பாதுகாத்துக் கொண்டுதான் அனைத்து நாடுகளுடன் செயற்பட வேண்டும். குறித்த பாதுகாப்பு ஒப்பந்தத்தில் இராணுவப் பயிற்சி, பாதுகாப்பு ஒத்துழைப்பு ஆகிய வற்றுக்கு அப்பாற்பட்ட விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு சட்டசபையில் இலங்கையின் கச்சத்தீவை மீளப்பெற்றுக் கொள்வதற்கான பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளது. இவ்வாறான பின்னணியில் இந்தியாவுடனான பாதுகாப்பு குறித்த சந்தேகம் தோற்றம் பெற்றுள்ளது.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியின் ஆட்சிக்காலத்தில்தான் விடுதலைப்புலிகள் அமைப்புக்குப் பயிற்சி வழங்கப்பட்டது. இந்தக் காலப்பகுதியில்தான் இலங்கை – இந்திய ஒப்பந்தம் உருவாக்கப்பட்டது. ஆகவே, இந்தியாவுடனான ஒப்பந்தத்தின் உள்ளடக்கத்தை அரசு வெளிப்படைத்தன்மையுடன் பகிரங்கப்படுத்த வேண்டும்.” – என்றார்.

# ட்ரம்பின் புதிய வரி தீர்மானத்தால் நாங்கள் அதிர்ச்சியடைந்துள்ளோம்

## அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவிப்பு



”இலங்கை மீது அமெரிக்கா சமீபத்தில் விதித்த பரஸ்பர வரிகளால் அதிர்ச்சியடைந்துள்ளோம். இந்த நடவடிக்கை நாம் எதிர்பாராதது. இது ஏற்றுமதி இலக்குகள் மீது பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும்.”

– இவ்வாறு தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை மேம்பாட்டு அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

“இது உண்மையில் ஒரு பெரிய அதிர்ச்சியாகும். இவ்வாறானதொரு தீர்மானத்தை நாம் எதிர்பார்க்கவில்லை. இந்தப் புதிய வரி அதிகரிப்பானது ஏற்றுமதியை 3 பில்லியன் டொலர்கள் வரை அதிகரிக்கும் எமது அரசின் இலக்கைத் தடுக்கக்கூடும்.

இலங்கைக்கு 44 சதவீத ஏற்றுமதி வரி விதிக்கப்பட்டுள்ளமை நியாயமற்றது. இது இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகத் தொடர்புகளைக் குறைக்கும். இது இலங்கைக்கு விகிதாசாரமாக அபராதம் விதிக்கும் ஒரு முறையாகும். எமக்கு இவ்வாறு வரி விதிக்கப்படுவதற்கு அமெரிக்காவிடம் எந்த அரசியல் காரணமும் இல்லை.

வங்குரோத்து நிலையிலிருந்து இலங்கை இப்போதுதான் படிப்படியாக மீண்டு வருகின்றது. இவ்வாறான நிலைமையில் இந்தளவு வரியைத் தாங்கிக் கொள்வது மிகவும் கடினமாக இருக்கும். எவ்வாறிருப்பினும் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் திட்டம் நீண்ட காலத்துக்குச் சாத்தியமற்றதாக இருக்கலாம்.” – என்றார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சி

**பொருளாதாரம்...**

– என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

“எனவே, மிகச் சரியான சந்தர்ப்பத்தில் இலங்கை வரும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் கரங்களை நாம் இறுகப் பற்றி, வளர்ச்சி அடையும் உலகின் ஐந்தாவது பெரிய பொருளாதார நாடான இந்தியாவுடன் சேர்ந்து கரையேற வேண்டும்.” – என்றும் மனோ கணேசன் அறிவுரை வழங்கியுள்ளார்.

அமெரிக்க வரி விதிப்பு மற்றும் இந்தியப் பிரதமரின் இலங்கை வருகை ஆகியன தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே மனோ கணேசன் எம்.பி. இவ்வாறு குறிப்பட்டுள்ளார்.

“கடந்த கால இலங்கை அரசுகள், இந்தியா, சிங்கப்பூர், அமெரிக்கா, போன்ற பல்வேறு நாடுகளுடன், பரஸ்பர வர்த்தக ஒப்பந்தங்கள் செய்ய முயன்ற போது, அவற்றை, எதிர்த்து பல்கலைக் கழக மாணவர் அணி, தொழிற்சங்க படை ஆகியவற்றைத் தெருவில் இறக்கி நாட்டின் பொருளாதார வளர்ச்சியைத் தடுத்த தமது பாவத்தைக் கழுவ வேண்டிய நிலைமைக்கு இன்று ஜே.வி.பி. தள்ளப்பட்டுள்ளது.” – என்றும் மனோ கணேசன் எம்.பி. குறிப்பிட்டுள்ளார்.

“ஆகவே, இது பழைய அரசியல் செய்யும் நேரமில்லை. நிலைமையின் பாரதூரத்தை அநுரகுமார உணர வேண்டும். இந்தியா, சிங்கப்பூர், அமெரிக்கா போன்ற உலகின் முன்னேறிவரும் பொருளாதார சக்திகளுடன் பரஸ்பர வர்த்தக ஒப்பந்தங்கள் செய்ய ஜனாதிபதி அநுரகுமார முன் வர வேண்டும்.” – என்றும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.



# முதலாம் பக்கத் தொடர்ச்சி

## இலங்கை வந்தார்....

இந்தியப் பிரதமரின் வருகையையடுத்து அவரை வரவேற்பதற்கு இன்று விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தலைநகர் கொழும்பில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் அழைப்பையேற்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு வந்துள்ளார்.

வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத், சுகாதாரம் மற்றும் ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ, மீன்பிடி, நீரியல் மற்றும் கடல்வள அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் கிரிஷாந்த அபேசேன மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ ஆகியோரால், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் இராஜதந்திரிகள் குழுவினருக்கு விமான நிலையத்தில் சிறப்பு வரவேற்பு அளிக்கப்பட்டது.

இலங்கை மற்றும் இந்தியாவுக்கு இடையில் “நூற்றாண்டு நட்புறவின் வளமான எதிர்காலத்திற்கான உறுதிப்பாடு” என்ற எண்ணக்கருவை உறுதிப்படுத்தும் வகையில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இந்த விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

இன்று காலை 9 மணிக்கு சுதந்திர சதுக்கத்தில் இந்தியப் பிரதமருக்கான வரவேற்பு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

அதனைத் தொடர்ந்து ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார மற்றும் இந்திய பிரதமர் மோடிக்கிடையில் இருதரப்பு பேச்சுவார்த்தைகள் இடம்பெறவுள்ளன.

பேச்சுவார்த்தைகளின் நிறைவில் இருவராலும் கூட்டு ஊடக அறிவித்தலும் வெளியிடப்படவுள்ளது.

இந்தியப் பிரதமர் இலங்கைக்கு விஜயம் செய்யும் நான்காவது சந்தர்ப்பம் இதுவென்பதுடன், இந்தியா மற்றும் இலங்கைக்கு இடையில் பொருளாதார, கலாசார மற்றும் வரலாற்று தொடர்புகளை மேலும் பலப்படுத்திக்கொள்வது, இரு நாடுகளுக்கு இடையிலான ஒத்துழைப்புக்களை பலப்படுத்திக்கொள்வதுமே இந்த அரச விஜயத்தின் நோக்கமாகும்.

இதன்போது வலுசக்தி, டிஜிட்டல் மயமாக்கல், பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் ஆகிய துறைகளில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மற்றும் இந்தியாவுடனான கடன் மறுசீரமைப்பு தொடர்பான ஒப்பந்தங்கள் ஆகியவை பரிமாறிக்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்திய ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படும் சம்பூர் சூரிய மின் உற்பத்தி நிலையத் திட்டம், வெப்பநிலை மற்றும் ஈரப்பதத்தைக் கட்டுப்படுத்தக் கூடிய 5,000 மெட்ரிக் தொன் தம்புள்ள களஞ்சிய வளாகத்தின் நிர்மாணம், 5,000 மதத் தலங்களின் கூரைகளில் சூரிய மின்கலங்களை நிறுவும் திட்டம் என்பவற்றை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மெய்நிகர் ஊடாக ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

அதேபோல், இந்தியப் பிரதமர் அநுராதபுரம் ஸ்ரீ மகா போதிக்கு வழிபாடு மேற்கொள்ள இருப்பதுடன் இந்திய அரசின் அன்பளிப்புடன் நிறுவப்பட்ட மஹவ-அனுராதபுரம் ரயில் சமிக்ஞை கட்டமைப்பு மற்றும் மறுசீரமைக்கப்பட்ட ரயில் பாதையைத் திறந்து வைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல், பாதுகாப்புச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி உள்ளிட்ட இந்திய அரசின் சிரேஷ்ட அதிகாரிகள் குழுவும் இதில் கலந்துகொண்டுள்ளனர்.

வடக்கு கிழக்கு மற்றும் மலையகத்தைச் சேர்ந்த தமிழ் அரசியல் பிரதிநிதிகளும் இந்தியப் பிரதமர் மோடியைச் சந்தித்துப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, இந்தியப் பிரதமரின் விஜயத்தை முன்னிட்டு விசேட போக்குவரத்து திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் இன்று சனிக்கிழமை காலிமுகத்திடல், சுதந்திர சதுக்கம், பத்தரமுல்லை அபேகம ஆகிய பகுதிகளை அவ்வப்போது மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணி முதல் காலை 10 மணி வரை அனுராதபுரம் நகரம், ரயில் நிலைய வீதி மற்றும் ஸ்ரீ மகாபோதியை அண்மித்த பகுதிகளை அவ்வப்போது மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.









# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பாதுகாப்பு ஒப்பந்தம்

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மூன்று நாள் விஜயமாக நேற்று இரவு கொழும்பை வந்தடைந்தார்.

அவர் இலங்கையில் இருக்கும் சமயம் இலங்கை - இந்தியத் தரப்புகளுக்கு இடையில் பல்வேறு ஒப்பந்தங்கள் கைச்சாத்தாக இருக்கின்றன.

அதில் பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தமும் ஒன்று. அதுதான் அந்த ஒப்பந்தங்களில் முக்கியமானது என்றும் கூறப்படுகின்றது.

கடந்த 29 ஆம் திகதி புதுடெல்லியில் இந்தப் பாதுகாப்பு ஒப்பந்தம் பற்றிய செய்தி அம்பலமாகும் வரை அது குறித்துத் தகவல் ஏதும் வெளியிடப்படவில்லை.

இந்தப் பாதுகாப்பு ஒப்பந்தம் தொடர்பில் இலங்கை நாடாளுமன்றத்திற்குத் தெரியாது, பொதுமக்களுக்கு விடயம் கூறப்படவில்லை, போதுமான அளவு பகிரங்க வெளியில் அது குறித்து விவாதிக்கப்படவில்லை, அதில் இடம் பெற்றுள்ளவை பற்றி யாருக்கும் எதுவும் தெரியாது, இரகசியமாக அது முன்னெடுக்கப்படுகின்றது.... என்றெல்லாம் எதிர்க்கட்சிகள் தரப்பில் இருந்து முணுமுணுப்புக்கள் வரத் தவறவில்லை.

இலங்கையைப் பொறுத்தவரை இத்தகைய நடவடிக்கைகள் - அதுவும் இந்தியாவுடனான பாதுகாப்பு உறவாடலில் இத்தகைய ஒளிவு மறைவு நடவடிக்கைகள் - புதியவை அல்ல. காலம் காலமாக நடைபெறும் விவகாரம்தான்.

ஜே.ஆர்.ஜெயவர்தனா - ராஜீவ் காந்தி இடையே கையெழுத்தான இலங்கை - இந்திய ஒப்பந்தம் கூட அத்தகைய ஒன்றுதான். அது கையெழுத்தாகி நடைமுறைக்கு வந்த பின்னர்தான் நாடாளுமன்றத்திற்கும், அப்போதைய அமைச்சரவைக்கும் கூட, அதன் உள்ளடக்கம் தெரிய வந்தது.

அதனால் அப்போதைய ஆளும் கட்சிக்குள்ளேயே பெரும் கசப்புணர்வும் எதிர்ப்பும் வெளிப்பட்டமை மறக்க கூடியது அல்ல.

அந்த ஒப்பந்தத்தைச் செய்வதற்காக தனது முப்படைகளையும் பொலிஸையும் பொதுமக்கள் மத்தியில் களத்தில் இறக்க வேண்டிய தேவை இலங்கையின் அப்போதைய ஜனாதிபதிக்கு ஏற்பட்டது.

அப்படி ஒளிவு மறைவாச் செய்யப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்திற்கு எதிராகத்தான் இன்று ஆட்சிப் பீடத்தை அலங்கரித்து இருக்கும் தேசிய மக்கள் சக்தியின் பிரதான பங்காளிகளான ஜே.வி.பி. அப்போது ஆயுதமேந்திப் போராடியது என்பதையும் மறந்து விட முடியாது.

அயல்நாட்டோடு கொழும்பு அரசு செய்து கொண்ட பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தத்தின் வாசகங்களை மக்களுக்கு நேரத்துடன் அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் அரசு வெளிப்படுத்தவில்லை என்பது ஜே.வி.பியினரின் பிரதான குற்றச்சாட்டுகளில் ஒன்று.

அரசுக்கு எதிராக ஜே.வி.பி. முன்னெடுத்த ஆயுதப் போராட்டத்தின் நியாயப்படுத்தலுக்கு அதுவும் ஒரு முக்கிய காரணம்.

இன்று அதே ஜே.வி.பி., இப்போதைய அரசின் முக்கிய பங்காளிகளாக இருந்து கொண்டு, அதேபோன்ற ஒரு பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தத்தை இந்திய பிரதமரோடு, அதே கொழும்பு மாநகரில் செய்யப் போகின்றது.

அப்போதைய காலகட்டத்தை போல இப்போதும் பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தத்தின் உள்ளடக்கம் இன்னும் வெளி வரவில்லை. வெளிப்படுத்தப்படவில்லை.

பெரும்பாலும் இன்று கைச்சாத்தாகும் என எதிர்பார்க்கப்படும் அந்த ஒப்பந்தம் இன்று கைச்சாத்தான பின்னர் கூட பகிரங்கமாக அமைச்சரவைக்கு வருமா? நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமா? என்பவையெல்லாம் கேள்விகளாகவே இருக்கின்றன.

கடந்த வருட இறுதியில் இலங்கையின் புதிய ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க புதுடில்லி சென்று பிரதமர் மோடியோடு பேச்சு நடத்திய பின்புலத்தில், இந்தப் புதிய பாதுகாப்பு ஒப்பந்தத்துக்கான பிள்ளையார் சுழி போடப்பட்டிருக்கும் என்று கருதப்படுகிறது.

இன்று ஒப்பந்தம் கைச்சாத்தான பின்னர் அதன் உள்ளடக்கம் வெளியாகும். அதன் பின்னர் அதன் நன்மை, தீமை பற்றிய விவாதங்கள் பெரிய அளவில் வெளிப்படும் என எதிர்பார்க்கலாம்.







# புலிபாய்ந்தகல்லில் பெரும்பான்மையின மீனவர்கள் அத்துமீறி வாடிகளை அமைக்க இம்முறையும் முயற்சி

## தடுத்து நிறுத்த நடவடிக்கை மேற்கொண்ட ரவிகரன் எம்.பி.

(பா.சதீசன்)

முல்லைத்தீவு – கொக்குத்தொடுவாய் வடக்கு கிராம அலுவலர் பிரிவில், புலிபாய்ந்தகல் பகுதியில் அமைந்துள்ள தமிழ் மீனவர்களின் சில வாடிகளை அடாவடித்தனமாக அகற்றி விட்டு, அந்த இடத்தில் தென்னிலங்கையைச் சேர்ந்த பெரும்பான்மையின மீனவர்கள் அத்துமீறி வாடி அமைக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளனர் என்று கூறப்படுகின்றது.

இந் நிலையில் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேற்றைய தினம் அந்தப் பகுதிக்கு நேரடியாகச் சென்று நிலமைகளைப் பார்வையிட்டமையுடன், உரிய தரப்பினரோடு தொடர்புகொண்டு கலந்துரையாடி தென்னிலங்கை பெரும்பான்மையின மீனவர்களால் அத்துமீறி அமைக்கப்பட்ட வாடிகளை அகற்றுவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:ஃ

தமிழ் மீனவர்கள் நெடுங்காலமாக மீன்பிடியில் ஈடுபட்டு வரும் முல்லைத்தீவு – கொக்குத்தொடுவாய் புலிபாய்ந்தகல் பகுதியை ஆக்கிரமித்து அங்கு வாடிஅமைப்பதற்கு பெரும்பான்மையின மீனவர்கள் தொடர்ந்து முனைப்புக்காட்டி வருகின்றனர்.

அந்தவகையில் கடந்தவருடமும் அத்துமீறி அந்தப் பகுதியில் வாடிஅமைப்பதற்கு சில பெரும்பான்மையின மீனவர்கள் முயற்சி மேற்கொண்டிருந்தனர். இந் நிலையில் அப்பகுதி மீனவர்கள் மற்றும் வன்னிமாவட்டத் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் ஆகியோர் இணைந்து அந்த அத்துமீறல் நடவடிக்கையைத் தடுத்து நிறுத்தியிருந்தனர்.

இத்தகைய சூழலில் மீளவும், கடந்த சில நாள்களுக்கு முன்பதாக குறித்த புலிபாய்ந்தகல் பகுதியில் தென்னிலங்கையைச் சேர்ந்த சில பெரும்பான்மையின மீனவர்கள், முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத் திடமோ, கரைதுறைப்பற்று பிரதேசசெயலகக் காணிப் பிரிவிடமோ எவ்வித அனுமதிகளையும் பெறாது அத்துமீறி

தொடர்ச்சி▼















# புலிபாய்ந்தகல்லில் பெரும்பான்மையின மீனவர்கள் அத்துமீறி வாடிகளை அமைக்க இம்முறையும் முயற்சி

## தடுத்து நிறுத்த நடவடிக்கை மேற்கொண்ட ரவிகரன் எம்.பி.

தொடர்ச்சி▲

வாடிகளை அமைத்துள்ளனர்.

அத்தோடு புலிபாய்ந்தகல் பகுதியில் பூர்வீகமாக மீன்பிடியில் ஈடுபடும் சில தமிழ் மீனவர்களின் வாடிகளை அடாவடித்தனமாக அகற்றியே இவ்வாறு தென்னிலங்கை பெரும்பான்மையின மீனவர்களால் வாடி அமைக்கப்பட்டுள்ளது.

அதேவேளை OFRP-A-5491 CHW என்னும் இலக்கமுடைய மீன்பிடிப் படகொன்றும் அனுமதி பெறப்படாமல் அப்பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் கொக்குத்தொடுவாய் கடற்றொழிலாளர் சங்கத்தின் அழைப்பை ஏற்று அப்பகுதிக்குச் சென்ற வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நிலைமைகளைப் பார்வையிட்டார். அப்பகுதியில் பெரும்பான்மையின் தென்னிலங்கை மீனவர்களால் அத்துமீறி வாடி அமைக்கப்பட்டமை தொடர்பில் கரைதுறைப்பற்று காணி உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியமையுடன் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தினார். அதேவேளை கொக்குத்தொடுவாய் வடக்கு கிராம அலுவலரையும் உடனடியாக குறித்த இடத்திற்கு அழைத்து நிலமைகளைக் காண்பித்தமையுடன் அவரிடமும் இதுதொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும் வலியுறுத்தியிருந்தார்.

அதனைத் தொடர்ந்து முல்லைத்தீவு கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள உதவிப் பணிப்பாளர் க. மோகனகுமாருடனும் தொலைபேசியில் தொடர்பினை ஏற்படுத்தி, அனுமதியின்றி கரையே நிறுத்திவைக்கப்பட்டுள்ள படகுதொடர்பிலும் விரைந்து நடவடிக்கை எடுக்குமாறும் வலியுறுத்தியிருந்தார்.

இந்நிலையில்அத்துமீறி அமைக்கப்பட்டுள்ள வாடிகளை உடனடியாக அங்கிருந்து அகற்றுமாறு கரைதுறைப்பற்று பிரதேசசெயலக்காணிப் பிரிவால் அப்பகுதியில் துண்டுப்பிரசுரம் காட்சிப்படுத்தப்படுமென கரைதுறைப்பற்று பிரதேசசெயலக காணி உத்தியோகத்தரால் நாடாளுமன்ற உறுப்பினரிடம் தெரிவிக்கப்பட்டது. கொக்குத்தொடுவாய் கிராம அலுவலரும் இது தொடர்பில் உரிய இடங்களுக்கு தாம் தெரியப்படுத்துவார் எனவும் நாடாளுமன்ற உறுப்பினரிடம் தெரிவித்தார்.

அத்தோடு அனுமதிபெறப்படாது கரையே நிறுத்திவைக்கப்பட்டுள்ள படகுதொடர்பில் தம்மால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள உதவிப்பணிப்பாளர் மோகனகுமார் நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் அவர்களிம் தெரிவித்திருந்தார்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கருத்துத் தெரிவிக்கையில், –

கொக்குத்தொடுவாய் வடக்கு, தெற்கு, மத்தி ஆகிய மூன்று கிராமங்களிலும் வாழும் தமிழ் மக்களின் ஒரேயொரு மீன்பிடித் துறையாக இந்த புலிபாய்ந்தகல் பகுதியே காணப்படுகின்றது.

அந்த மக்களின் வாழ்வாதாரத்தைச் சூறையாடும் வகையில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் இத்தகைய அத்துமீறல், அடாவடித்தனமான முயற்சிகளை தொடர்ந்தும் அனுமதிக்கமுடியாது. ஓரளவிற்குத்தான் நாமும் பொறுமையாக இருக்கமுடியும் – என்றார்.

இதன்போது கொக்குத்தொடுவாய் கடற்றொழிலாளர் சங்கத்தலைவர் ந.மதியழகன், தமிழரசுக்கட்சியின் கரைதுறைப்பற்று பிரதேச உபசெயலாளர் கி.சிவகுரு ஆகியோரும் குறித்த இடத்தில் இருந்தமை குறிப்பிடத்தக்கது.















# மீளப்பெற முடியாத சமஷ்டி முறையை பிரதமர் மோடியிடம் வலியுறுத்துங்கள்

## வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு தமிழ் எம்.பிக்களிடம் கோரிக்கை

(மன்னார் நிருபர் எஸ்.லெம்பேட்)

இலங்கையின் வடக்கு – கிழக்கு மாகாணத்திற்கு மீளப்பெற முடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப்பகிர்வை ஏற்படுத்த இந்திய அரசு உயரிய ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை இந்திய பிரதமரிடம் வலியுறுத்தக் கோரி வடக்கு, கிழக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் நேற்றைய தினம் அவசர ஒன்று கையளிக்கப்பட்டது.

வடக்கு – கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் இணை இணைப்பாளர் யே.யாட்சன் பிகிறாடோ தலைமையில் வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் இந்த மகஜர் கையளிக்கப்பட்டது.

அந்த மகஜரின் விவரம் வருமாறு:–

தமிழ் தேசிய அரசியல் கட்சிகளின் தலைமைத்துவங்களிடமும் அக்கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும் வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவாகிய நாம் பகிரங்க கோரிக்கையை முன் வைக்கின்றோம்.

இது வரை காலமும் இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு நிரந்தரமான அரசியல் தீர்வு கிடைக்கப் பெறவில்லை.

இதற்கு பிரதான காரணம் தமிழ் அரசியல் கட்சிகளிடையே அரசியல் தீர்வு குறித்த ஏகோபித்த உடன்பாடு காணப்படாமையும் ஐக்கியமின்மையுமே.

இந் நிலையில் தமிழ் தேசிய அரசியல் தலைமைகள் இந்தியப் பிரதமரை நேரடியாகச் சந்திப்பதற்கு அரிய வாய்ப்புக் கிடைத்துள்ளது.

மீளப் பெற முடியாத சமஷ்டி முறையிலான அரசியல் தீர்வே நிரந்தரமான தீர்வாக அமையுமென தமிழ் பேசும் மக்கள் அனைவரும் வலியுறுத்துகின்றார்கள்.

இலங்கையின் தேசிய பிரச்சினைக்கான தீர்வில் இந்தியாவின் பங்களிப்பு மிக முக்கியமானது என்பதனை மறுதலிக்கமுடியாது.

எனவே தமிழ் தேசிய அரசியல் தலைமைகள் அனைவரும் ஏகோபித்த குரலில் ஒரே கோரிக்கையை முன்வைக்க வேண்டும் என்பதனை வலியுறுத்துகின்றோம்.

இதுவே, தமிழ் தேசிய அரசியல் தலைமைகள் வடக்கு கிழக்கு தமிழ் பேசும் மக்களுக்கு செய்கின்ற அரசியல் கடமையாகும்.

அவ்வகையில் தமிழ் தேசிய அரசியல் தலைமைகள் அனைவரும் இந்தியப் பிரதமரிடம் முன்வைக்க வேண்டிய கோரிக்கையானது –

“இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணத்திற்கு மீளப் பெற முடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப்பகிர்வை ஏற்படுத்த இந்திய அரசு உயரிய ஒத்துழைப்பை வழங்க வேண்டும்” என்பதாகும். – என்றுள்ளது.





# கன மழையால் மத்திய மலைநாட்டில் நீர் தேக்கங்களின் நீர் மட்டம் உயர்வு

(மஸ்கெலியா நிருபர்)

கன மழை காரணமாக மத்திய மலைநாட்டில் நீர் தேக்கங்களின் நீர் மட்டம் உயர்ந்து வரும் நிலையில் உள்ளது.

குறிப்பாக விமலசுரேந்திர, கென்யோன், லக்சபான, பொல்பிட்டிய, நவலக்சபான, கலுகல, காசல்ரீ, மவுசாகல, மேல் கொத்மலை ஆகிய நீர் தேக்கங்களுக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது.

கடந்த சில நாள்களாக மத்திய மலைநாட்டில் மாலை வேளையில் கனத்த மழையுடன் இடி மின்னல் நிலவுவதால் பெருந்தோட்ட மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டு உள்ளது.

அத்துடன் பண்ணையாளர்கள் உட்பட விவசாயத்தில் ஈடுபட்டு உள்ளவர்களும் பெரிதும் பாதிக்க பட்டுள்ளனர்.

மாலை வேளைகளில் இப் பகுதியில் கடும் பனி மூட்டம் காணப்படுகிறது. ஆகையால் வாகன சாரதிகளை மிகவும் அவதானமாக வாகனங்களைச் செலுத்துமாறு ஹட்டன் பொலிஸ் நிலையப் போக்குவரத்து பிரிவு அதிகாரி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அத்துடன் மத்திய மலைநாட்டில் கடும் குளிர் நிலவி வருகிறது.
















# யாழ் மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கான தமிழரசு வேட்பாளர்களின் அறிமுகக் கூட்டம்

## நேற்று நல்லூர் இளம்கலைஞர் மன்றத்தில் இடம் பெற்றது

யாழ் மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கான இலங்கைத் தமிழரசுக் கட்சியின்

வேட்பாளர்களின் அறிமுகக் கூட்டம் நேற்றுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் நல்லூர் இளம்கலைஞர் மன்றத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன், இலங்கைத் தமிழரசு கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் உள்ளிட்ட கட்சி முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

யாழ் மாவட்டத்தை சேர்ந்த 17 உள்ளூராட்சி மன்றங்களுக்கு போட்டியிடும் வேட்பாளர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டமையுடன் ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றங்கள் சார்பிலும் போட்டியிடுபவர்கள் இதன்போது அறிமுகப்படுத்தப்பட்டனர்.

மேலதீக படங்கள்

தொடர்ச்சி▼















# யாழ் மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கான தமிழரசு வேட்பாளர்களின் அறிமுகக் கூட்டம்

## நேற்று நல்லூர் இளம்கலைஞர் மன்றத்தில் இடம் பெற்றது

தொடர்ச்சி▲













# தேசிய மக்கள் சக்தியின் யாழ் எம்.பிக்களை பார்த்தால் பெரிதும் பரிதாபமாக உள்ளதாம்!

## நேற்று நல்லூர் கூட்டத்தில் சாணக்கியன் எம்.பி. தெரிவிப்பு



(பிரபாகரன் டிலக்சன்)

வடக்கு மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை பார்க்கும் போது பரிதாபமாக உள்ளது. அவர்களுக்கு நாடாளு மன்றில் உரையாற்றவே சந்தர்ப்பம் வழங்கப்படுவதில்லை. செயற்றிறன் அற்றவர்களாக இருக்கிறார்கள். சிலவற்றை நாடாளுமன்றில் கதைத்தால் எம்.பி. பதவி பறிபோய்விடும் என்ற அச்சத்திலும் அவர்கள் உள்ளார்கள் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தெரிவித்தார்.

நேற்றைய தினம் இலங்கை தமிழரசுக் கட்சியின் யாழ் மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்பாளர் அறிமுக நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

உள்ளூராட்சித் தேர்தல் மிகவும் முக்கியமானது. கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆசனங்களை உறுதிப்படுத்துவதில் உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகளுக்கு முக்கிய பங்கு இருக்கின்றது. நாடாளுமன்றத்தில் தமிழரசுக் கட்சி எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கின்றது. ஆனால் உள்ளூராட்சி சபைகளில் நாங்கள் அதிகாரத்துடன் ஆட்சியமைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. இது ஒரு குட்டி அரசாங்கத்தை அமைப்பதற்கான தேர்தல். இதனை கைப்பற்றி மக்களுக்குரிய தேவைகளைப் பூர்த்தி செய்யமுடியும்.

மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படுமா என்ற சந்தேகம் உள்ளது. உள்ளூராட்சி சபை தேர்தலின் பிற்பாடு மாகாண சபைத் தேர்தலை நடத்துவதாக அநுரகுமார திஸநாயக்க எமக்கு தெரிவித்திருந்தார். ஆனால் அதற்குரிய சட்ட திருத்தத்தினை செய்வதற்கான ஏற்பாடுகள் இதுவரை இடம்பெறுவதாகத் தெரியவில்லை.

இந்த வருடம் மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியாது என அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜெயதிஸ்ஸ அண்மையில் தெரிவித்திருக்கிறார். மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான வாய்ப்பை இல்லாமல் செய்கின்றார்களா என்ற சந்தேகம் எழுகிறது.

தேசிய மக்கள் சக்தியை மட்டக்களப்பு மக்கள் ஜனாதிபதித் தேர்தலிலும், நாடாளுமன்றத் தேர்தலிலும் நிராகரித்தமை போல் உள்ளூராட்சித் தேர்தலிலும் நிராகரிப்பார்கள் என்ற செய்தியை தைரியமாக நாடாளுமன்றில் சொல்லியிருக்கின்றேன். மட்டக்களப்பில் அனைத்து சபைகளையும் நாங்கள் கைப்பற்றுவோம். ஆனால் யாழ் மாவட்டத்தை பார்க்கும் போது மிகவும் கவலையாக உள்ளது. நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடக்கு மாகாண மக்கள் விட்ட தவறை இந்த உள்ளூராட்சித் தேர்தலில் நிவர்த்தி செய்ய வேண்டும்.

பொருளாதாரத்தை கட்டி எழுப்புவார்கள் என்ற நம்பிக்கையில் வட மாகாண மக்கள் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்திருக்கலாம். ஆனால் அரிசி தட்டுப்பாட்டுக்கு நாயும், பூனையும் காரணம் என்றும், தேங்காய் தட்டுப்பாட்டுக்கு சம்பலும் சொதியும் சாப்பிடுவதே காரணம் என கூறும் அளவுக்குத்தான் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பொருளாதாரம் சம்பந்தமான அறிவு இருக்கின்றது.

அமெரிக்கா விதித்துள்ள பொருளாதார வரி விதிப்பு தொடர்பாக இரண்டு மாதங்களுக்கு முன்னரே நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தோம். ஆனால் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அலட்சியப் போக்கில் செயற்பட்டது.

2028இல் கடன்களை மீள செலுத்த வேண்டும். ஆனால் நாட்டில் அந்நிய செலவாணியை ஈட்டக்கூடிய எதுவிதமான முதலீடுகளும் ஈர்க்கப்படவில்லை. 2028ஆம் ஆண்டில் மீண்டும் நாடு வாங்குரோத்து அடையக்கூடிய சூழல் காணப்படுகின்றது. இதைப்பற்றி அக்கறை செலுத்தாமல் கட்சிக் கட்டமைப்புகளை பலப்படுத்துவதிலேயே அரசாங்கம் முனைப்புடன் செயற்படுகிறது.

வடக்கு மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பார்க்கும் போது பரிதாபமாக உள்ளது. அவர்களுக்கு நாடாளுமன்றில் உரையாற்றவே சந்தர்ப்பம் வழங்கப்படுவதில்லை. செயற்றிறன் அற்றவர்களாக இருக்கிறார்கள். சிலவற்றை நாடாளுமன்றில் கதைத்தால் எம்.பி. பதவி பறிபோய்விடும் என்ற அச்சத்திலும் அவர்கள் உள்ளார்கள்.

வடக்கு மாகாண மக்களினுடைய வாழ்வை மேம்படுத்துவதாக இருந்தால் பாரிய முதலீடுகள் இங்கே கொண்டுவரப்பட வேண்டும். இங்கிருக்கும் துறைமுகங்கள், விமான நிலையங்களை அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். ஆனால் வரவு - செலவுத் திட்டத்தில் இவற்றை அபிவிருத்தி செய்வதற்கான எந்தவிதமான நிதியும் ஒதுக்கப்படவில்லை.

இந்த அரசாங்கம் வடக்கு மக்கள் மீது கரிசனை கொண்ட அரசாங்கமாக இருந்தால், பலாலி விமான நிலையம், மன்னார் துறைமுகம் போன்றவற்றை அபிவிருத்தி செய்ய நிதி இல்லை எனில் இலங்கைக்கு வருகைதரும் பாரத பிரதமரிடம் ஒரு முன்மொழிவை கையளித்திருந்தால் நிச்சயமாக நிதி கிடைத்திருக்கும். ஆனால் அவர்களுக்கு அந்தச் சிந்தனை இல்லை.

அநுரா குமார திஸநாயக்க தலைமையிலான அரசாங்கமும் ஓர் இனவாத அரசாங்கமே. கோட்டாபய, மஹிந்த ஆகியோர் நாங்கள் சிங்கள மக்களின் ஜனாதிபதி என வெளிப்படையாக கூறினார்கள். ஆனால் இவர்கள் வெளிப்படையாக கூறவில்லை. ஆனால் அவர்களின் செயற்பாட்டை ஒத்த செயற்பாட்டையே இந்த அரசாங்கமும் மேற்கொள்கிறது. இதனை தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் தட்டிக் கேட்க முடியாத சூழ்நிலையில் உள்ளார்கள்.

காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்ட உள்ளக பொறிமுறையையே மீண்டும் இந்த அரசாங்கமும் கையிலெடுத்துள்ளது. குற்றம் செய்த இராணுவத்தினரை அநுர அரசாங்கமும் பாதுகாக்கின்றது.

நீண்ட காலமாக நிலவி வரும் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான எதுவிதமான கரிசனைகளையும் இந்த அரசாங்கம் மேற்கொள்ளவில்லை. புதிய அரசமைப்பைக் கொண்டு வருவதற்கு ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க அச்சப்படுகின்றார். புதிய அரமைப்புக் கொண்டுவரப்பட்டால் நிறைவேற்று அதிகாரம் ஒழிக்கப்பட வேண்டும். அவ்வாறு ஒழித்தால் தனக்கு பாதகமாக அமையும் என சுயநலமாகச் செயற்படுகின்றார்.

தமிழ் மக்களை ஏமாற்றி, தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்று, தமிழ் மக்களை நடுத்தெருவில் இந்த அரசாங்கம் விட்டுள்ளது. தேசிய மக்கள் சக்திக்கு இம்முறையும் தமிழ் மக்கள் வாக்களித்தால் ஏமாற்றமே மிஞ்சும். எனவே இந்த உள்ளூராட்சி தேர்தலில் தமிழ் மக்கள் தேசிய மக்கள் சக்திக்கு பதிலடி வழங்கவேண்டும். - என்றார்.

### வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் கல்வியமைச்சின் அனுமதியுடன்

# தொழில்மையமான கல்வியைத் தொடர உயர்தர கலைத்துறை கல்வி வழிகாட்டி

வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் கல்வியமைச்சின் அனுமதியுடன், க.பொ.த. உயர்தரத்தில் கலைத்துறையில் கல்வி கற்கும் மாணவர்கள் தொழில்மையமாகத் தமது கல்வியைத் தொடர்வதற்கு வழிகாட்டும் கருத்தரங்கு ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ் மத்திய கல்லூரிக்கு அருகிலுள்ள ட்றிம்மர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சிகரம் நிறுவனத்தின் கலைத்துறை கல்லூரியின் ஏற்பாட்டில் நடத்தப்படவுள்ள இந்தக் கருத்தரங்கில் 2027, 26 மற்றும் 25 ஆம் ஆண்டுகளில் கலைத்துறைக் கல்வியைத் தொடரும் க.பொ.த. உயர்தர மாணவர்களைக் கலந்து கொண்டு பயன்பெறுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கருத்தரங்கின் வளவாளர்களாக, பலாலி ஆசிரியர் கலாசாலை முன்னாள் அதிபர் கவிஞர் சோ.பத்மநாதன், நெல்லியடி மகாவித்தியாலய முன்னாள் அதிபர் கலாநிதி செ.சேதுராஜா, யாழ் பல்கலைக்கழக முன்னாள் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் இ.கிருஷ்ணகுமார், யாழ் பல்கலைக்கழக சமூகவியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் சு.ஜீவசுதன், தொழில் வழிகாட்டல் ஆலோசகரும், தேசிய கல்வி நிறுவக விரிவுரையாளருமான ஸ்ரீபவன் ஆகியோர் கலந்து கொள்ளவிருக்கின்றனர் என சிகரம் கலைத்துறைக் கல்லூரியின் நிறுவுநரும், நிறைவேற்றுப் பணிப்பாளருமான கோ.றுஷாங்கன் அறியத்தந்துள்ளார்.

"கல்விப் பயணத்தை ஆரம்பிக்க முன்னர் தொழில் இலக்கைத் தீரமானியுங்கள்" என்கின்ற மகுட வாக்கியத்துடன் நடத்தப்படவுள்ள இந்தக் கருத்தரங்கில், க.பொ.த. உயர்தரத்தில் கலைத்துறையில் கல்வி கற்கும் மாணவர்கள் தொழில்வாய்ப்புக்களுக்கு ஏற்றவிதமாக பொருத்தமான கலை – வர்த்தக பாடச் சேர்மானங்களைத் தெரிவுசெய்து கல்வி கற்பதற்கான வழிகாட்டல் வழங்கப்படுவதுடன், மாணவர்களுக்கு கல்வி – தொழில்சார் உளவியல் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, பொருத்தமான தொழில் துறைகளை நோக்கி அவர்கள் கற்றுத் தேறுவதற்கேற்ற வகையில் சிகரம் கலைத்துறைக் கல்லூரியினால் நடாத்தப்படவுள்ள க.பொ.த. உயர்தர கலைத்துறை வகுப்புக்கள் தொடர்பான விவரங்களும், விசேட கட்டணக் கழிவுகளுடன் உடனடி அனுமதிகளும் வழங்கப்படவிருக்கின்றன என அறிவிக்கப்பட்டுள்ளது.

# சாவகச்சேரிச் சந்தை வளாகக் கடையில் நிலைகொண்டுள்ள இராணுவத்தை வெளியேற்றி அதனை வாடகைக்கு விடுங்கள்

### இப்படி வலியுறுத்துகின்றார் அர்ச்சுனா எம்.பி.



(த.சுபேசன்)

சாவகச்சேரிப் பொதுச்சந்தை வளாகத்தில் உள்ள கடைத் தொகுதியில் தங்கியிருக்கும் இராணுவத்தினரை அகற்றி கடைகளை வாடகைக்கு விட நடவடிக்கை எடுக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா அண்மையில் நடைபெற்ற தென்மராட்சிப் பிரதேச அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் வலியுறுத்தியிருந்தார்.

இதுதொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் –

சாவகச்சேரி பொதுச்சந்தையில் உள்ள கட்டடத் தொகுதியில் மேல் மாடியில் உள்ள கடையொன்றில் இராணுவம் உள்ளது.

இதனால் அப் பகுதிக் கடைகள் அனைத்தும் வெறுமனே களஞ்சியமாக மூடிய நிலையிலேயே உள்ளன.

இராணுவம் இருந்தால் அப்பகுதியில் வர்த்தக நிலையங்களைத் திறக்க முடியாது.

வர்த்தக சங்கம் பாதுகாப்புக் கருதி வேண்டுகோள் விடுத்த நிலையிலேயே இராணுவம் சந்தையில் இருப்பதாக தெரிவிக்கப்படுகின்ற போதிலும் அதில் எவ்வித உண்மையும் இல்லை. வர்த்தக சங்கம் இராணுவத்திடம் எவ்வித கோரிக்கையையும் விடவில்லை.

இலங்கையில் எந்தவொரு சந்தையிலும் இராணுவம் இவ்வாறு கடைத்தொகுதியில் பாதுகாப்பிற்கென இருப்பதில்லை. சாவகச்சேரியில்தான் இப் புதிய நடைமுறை காணப்படுகின்றது.

சாவகச்சேரி நகரசபையானது ஒரு மாத மாத காலத்திற்குள் கடைத் தொகுதியில் இருந்து இராணுவத்தை வெளியேற்றி, அப்பகுதி கடைகளை வாடகைக்கு விட நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் மேலும் வலியுறுத்தியிருந்தார்.

சாவகச்சேரி நகரசபையானது தனியார் ஒருவருக்கு குத்தகைக்கு வழங்கிய கடையிலேயே இராணுவம் தங்கியிருப்பதாகவும் –

இருப்பினும் குத்தகைக்கு பெற்றவருடைய தொடர்புகள் எவையும் இல்லை எனவும் – தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த காலங்களில் சாவகச்சேரி பொதுச் சந்தை வளாகத்தில் இரவு வேளைகளில் தேங்காய் மற்றும் உடைகள் உள்ளிட்ட பொருள்கள் தொடர்ச்சியாக திருட்டுப் போகும் நிலை காணப்பட்டது. இருப்பினும் இராணுவம் சந்தை வளாகத்தில் கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் 24மணி நேரமும் ஈடுபடத் தொடங்கிய பின்னர் அவ்வாறான திருட்டுச் சம்பவங்கள் முற்றாக இல்லாமல் போயுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பற்பசை ரியூப்பிற்குள் போதைப்பொருளை மறைத்து வவுனியா சிறைக்கு எடுத்துச் சென்ற இருவர் கைது!

(த.சுபேசன்)

வவுனியா சிறைச்சாலைக்குள் பற்பசையினுள் போதைப் பொருளை மறைத்து எடுத்துச் சென்ற ஆண் ஒருவரும் பெண் ஒருவரும் கடந்த புதன்கிழமை சிறைச்சாலை உத்தியோகத்தர்களால் கைது செய்யப்பட்டு வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

சிறைச்சாலைக்குள் இருந்த நபர் ஒருவரைப் பார்வையிட வந்த – மன்னார் பகுதியைச் சேர்ந்த – இருவரே இவ்வாறு சூட்சுமமாக பற்பசை ரியூப்பிற்குள் குடு மற்றும் ஐஸ் போதைப்பொருள்களை மறைத்து எடுத்து வந்திருந்த நிலையில் சிறைச்சாலை உத்தியோகத்தர்களால் கைது செய்யப்பட்டு பொலிஸாரிடம் மேலதிக விசாரணைகளுக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளனர் எனக் கூறப்பட்டது.

# போதைப்பொருளுடன் மத்துகமவில் ஒருவர் கைது

1 கிலோ கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் மத்துகம சந்தைப் பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் போதைப்பொருளை கொண்டு சென்று கொண்டிருந்தபோதே அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

அகலவத்த பகுதியைச் சேர்ந்த 42 வயதான சந்தேகநபரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

இதேவேளை, இரத்மலானை மெலிபன் சந்திக்கருகில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பில் 800 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இரத்மலானை பகுதியைச் சேர்ந்த 29 வயதான குறித்த சந்தேகநபரிடமிருந்து 496,000 ரூபாவும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.



# அனைத்து பல்கலை மாணவர் ஒன்றிய ஏற்பாட்டாளர் பிணையில் விடுதலை




விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் மதுஷான் சந்திரஜித் மற்றும் இணை சுகாதார விஞ்ஞான பட்டதாரிகள் ஒன்றியத்தின் செயலாளர் ஆகியோர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் நேற்று மாளிகாகந்த நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

அவர்களை தலா 10 இலட்சம் ரூபா பெறுமதியான 2 சரீரப்பிணையில் விடுவிக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இலவச கல்வி தனியார் மயமாக்கப்படுவதாக குற்றஞ்சாட்டி நீதிமன்ற உத்தரவை மீறி சுகாதார அமைச்சிற்கு முன்பாக சத்தியாகிரகத்தில் ஈடுபட்டதால் கடந்த மார்ச் 28 ஆம் திகதி இருவரும் கைது செய்யப்பட்டனர்.

# இலங்கைக்கு வருகை தந்துள்ளனர் நாணய நிதிய பிரதிநிதிகள் குழு





சர்வதேச நாணய நிதிய பிரதிநிதிகள் குழு இலங்கைக்கு வருகை தந்துள்ளது.

இலங்கைக்கு வழங்கப்படவுள்ள நான்காவது கடன் தவணை தொடர்பில் மீளாய்வு செய்வதற்காக அவர்கள் வருகை தந்துள்ளனர் என நிதி பிரதியமைச்சர் பேராசிரியர் அனில் ஜயந்த பெர்னாண்டோ தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதிய பிரதிநிதிகள் குழுவினர் எதிர்வரும் 11 ஆம் திகதி வரை நாட்டில் தங்கியிருப்பார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.





# பனை அபிவிருத்திச் சபையின் பதில் பொது முகாமையாளராக திருமதி சிவகாமி உமாகாந்தன்

(த.சுபேசன்)

பனை அபிவிருத்திச்சபையின் புதிய பொது முகாமையாளராக திருமதி உமாகாந்தன் சிவகாமி பெருந்தோட்ட மற்றும் சமுக கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் செயலாளரினால் கடந்த முதலாம் திகதியன்று நியமிக்கப்பட்டுள்ளார்.

கரவெட்டிப் பிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேச செயலராக கடமையாற்றிய திருமதி சிவகாமி நேற்று முன் தினம் வியாழக்கிழமை பனை அபிவிருத்திச்சபையின் பதில் பொது முகாமையாளராகத் தனது பதவிகளைப் பொறுப்பேற்றிருந்தார்.

பதவி பொறுப்பேற்பு நிகழ்வில் பனை அபிவிருத்திச் சபையின் பணியாளர்கள் மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

பனை அபிவிருத்திச்சபையின் கடந்த கால பதில் பொது முகாமையாளர் மீது அதன் பணியாளர்கள் மற்றும் சபையின் நலன்விரும்பிகள் முன்வைத்த குற்றச்சாட்டுகளுக்கு அமைவாக மேற்படி புதிய பதில் பொது முகாமையாளர் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# குருநாகல் – தம்புள்ள பிரதான வீதியில் டயர் வெடித்ததால் தடம் புரண்ட லொறி

(உடப்பு க.மகாதேவன்)

குருநாகல் தம்புள்ள பிரதான வீதியில் இப்பாகமுவ பகுதியில் வீதியில் சென்று கொண்டிருந்த அசோக் லேலண்ட் லொறி ஒன்று அதன் டயர் வெடித்ததில் தடம் புரண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை 2.30மணிக்கு இடம்பெற்றுள்ளது. இதன் போது அதில் பிரயாணம் செய்தவர்கள் சிறிய காயத்துக்குள்ளாகினர். அருகில் உள்ள மின் கம்பமும் சேதமடைந்துள்ளது. காயமடைந்தவர்கள் குருநாகல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.







# தேவையான அளவு அரிசி உள்ள போதும் குறைந்த லாபத்தில் அதனை வாங்கி விற்பதற்கு வர்த்தகர்கள் தயாராக இல்லை!

## வவுனியா மாவட்ட அரிசி ஆலை உரிமையாளர் சங்கத் தலைவர் விசனம்

(கி.வசந்தன்)

அரிசி ஆலைகளில் நாட்டிற்குத் தேவையான அரிசி உள்ள போதும் வர்த்தகர்கள் குறைந்த இலாபத்தில் அதனை கொள்வனவு செய்து விற்பதற்குத் தயாராக இல்லை என வவுனியா மாவட்ட அரிசி ஆலை உரிமையாளர் சங்க தலைவர் சி.விவேகானந்தன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற ஊடகசந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

சிறுபோக நெல் வரும் வரை மக்களுக்கு தேவையான அரிசியை வழங்குவதற்கு நெல் இருக்கின்றது. அரிசி ஆலைகளிலும், பொருளாதாரம் உள்ள தனியார் கொள்வனவு செய்து வைத்துள்ள நெல்லும் உள்ளது. அதிகூடிய விலையில் விற்பதற்காக அவர்கள் வைத்துள்ளார்கள். அரிசி ஆலை உரிமையாளர்களைப் பொறுத்த வரை அரச கட்டளைக்கு உடன்பட்டு அரசின் விலை நிர்ணயத்திற்கு கொடுப்பதற்கு தாராளமான அரிசி இருக்கிறது. ஆனால் அரிசி தட்டுப்பாடு, வெளிநாட்டில் இருந்து இறக்கப் போவதாக கூறுகிறார்கள்.

முதல் இருந்த அரசாங்கம் அரிசியில் கொமிஷன் எடுத்துள்ளார்கள். இது நல்லாட்சி செய்யும் அரசு. எலலா இடங்களிலும் உள்ள நெல்லைக் கணக்கெடுத்து சந்தைப் படுத்துவதற்குரிய உதவியையும் அதற்குரிய பொறிமுறையையும் செய்ய வேண்டும். எம்மிடம் தற்போது போதிய அரிசி இருக்கிறது. வாங்குவதற்கு வர்த்தக நிலைய உரிமையாளர்கள் தயாரில்லை.

முன்னைய காலத்தில் ஒரு கிலோ அரிசிக்கு 20, 30 ரூபா இலாபம் வைத்து விற்பனை செய்த சில்லறை வியாபாரிகள், மொத்த வியாபாரிகள் தற்போது அரசாங்கத்தால் கூறப்பட்ட கட்டுப்பாட்டு விலையில் இருந்து 5 ரூபா குறைத்து வழங்குமாறு கூறப்பட்டதற்கு இணங்க நாம் விநியோகிக்கின்ற போது அவர்கள் இலாபம் போதாது என கொள்வனவு செய்கிறார்கள் இல்லை. வெள்ளை நாடு 230 ரூபா அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட விலை. நாங்கள் 225 ரூபாவிற்கு கொடுக்கத் தயாராக இருக்கின்றோம். சிவப்பு நாடு 230 ரூபாய். அதையும் 225 கொடுக்க தயார். அதை வாங்க முதலாளிமாரும் இல்லை. வத்தக நிலையம், சதொச, கூட்டுறவுச் சங்கம் என எவையும் இல்லை.




ஆனால் அரிசி இல்லை, அரிசித் தட்டுப்பாடு எனக் கூறுகிறார்கள். வங்கியில் கடன் எடுத்து நெல் கொள்வனவு செய்தோம். அந்தக் கடனை 6 மாதத்தில் திருப்பிச் செலுத்த வேண்டும். அதனால் அரிசியை விற்க வேண்டும். அடுத்த சிறுபோக நெல் வருகிறது. இதை விற்றால்தான் சிறுபோக நெல்லைக் கொள்வனவு செய்ய முடியும். இதை அரசாங்கம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

இலங்கையில் தற்போது அரிசி தட்டுப்பாடு இல்லை. குளங்களில் நிறைய தண்ணீர் இருக்கிறது. சிறுபோக நெல் வந்தால் இந்த வருடத்திற்கே அரிசி தட்டுப்பாடு இருக்காது. இதனை அரசாங்கம் விளங்கிக் கொள்ள வேண்டும். அரிசி இருக்கிறது, அதை வாங்க வர்த்தக நிலையங்கள் தயார் இல்லை. அரச கட்டுப்பாட்டு விலையில் கொள்வனவு செய்து, நெல்லைக் குற்றி கட்டுபாட்டு விலைக்கு அரிசியை கொடுக்க கூடியதாக உள்ளது. அதை நாம் செய்கின்றோம். வர்த்தக நிலைய உரிமையாளர்கள் முன்னைய காலம் போல் அரிசியில் அதிக இலாபம் பார்ப்பதால் கொள்வனவு செய்கிறார்கள் இல்லை. தென்னிலங்கையில் இருந்து வரும் அரிசியைக் கடைக்குள் ஒளித்து வைத்து 360 ரூபாய்க்கு விற்கிறார்கள். ஆனால் எமது மாவட்டத்தில் உள்ள தேவையான அரிசியை வாங்குகிறார்கள் இல்லை. ஆகவே, அரசாங்கம் இதனை ஒரு பொறிமுறைக்குள் கொண்டு வர வேண்டும். – என்றார்.

# தமிழக ஆளுநர் விருதினைப் பெறுகிறார் தமிழருவி சிவகுமாரன்



இலங்கையின் தலைசிறந்த சொற்பொழிவாளர்களில் ஒருவரும் தமிழறிஞருமான தமிழருவி த.சிவகுமாரன் இன்று 5ஆம் திகதி இந்தியாவில் தமிழ்நாடு ஆளுநர் மாளிகையில் நடைபெறும் தமிழறிஞர்களுக்கான கௌரவிப்பு நிகழ்ச்சியில் தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவியிடமிருந்து, இலங்கையிலும் தமிழர்கள் வாழும் தேசமெங்கும் கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாகச் செய்துவரும் தமிழ் இலக்கியப் பணிகளுக்காக சிறப்பு கௌரவ விருதினைப் பெறுகிறார்.

குறிப்பாக கம்பன் தமிழுக்காக 1981 முதல் பல சொற்பொழிவுகளை நிகழ்த்தியும், கட்டுரைகளை எழுதியும் வரும் தமிழருவி சிவகுமாரன், 1985 ஆம் ஆண்டு காரைநகரில் கம்பன் கழகத்தை அமைத்து பல ஆண்டுகளாக வியக்கத்தக்கவகையில் கம்பன் விழாக்களை நடாத்தி வந்தவர். கம்பராமயணத்தை யாழ்ப்பாணத்தில் பல இடங்களிலும் தொடர் சொற்பொழிவுகளாக நிகழ்த்தியமைக்காக 'கம்பகலாசுரபி'(யாழ்ப்பாணம்), "கம்பன் புகழ் விருது" (மன்னார்) போன்ற விருதுகளைப் பெற்றவர்.

லண்டனில் 1998 இல் நடைபெற்ற முதலாவது உலக சைவ மாநாட்டில் கலந்து கொண்டதிலிருந்து இங்கு நடைபெற்ற பன்னிரெண்டு சைவ மாநாடுகளிற்கு இவர் அழைக்கப்பெற்று சிறப்புரைகளை ஆற்றிய பெருமைக்குரியவர்.

தமிழருவி சிவகுமாரன் கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாக லண்டன், சுவிஸ், ஜேர்மன், பிரான்ஸ், ஹொலண்ட், நோர்வே, சிங்கப்பூர், மலேசியா, ஆஸ்திரேலியா, இந்தியா ஆகிய நாடுகளின் இலக்கிய, சமய அமைப்புகளால் தமிழ் இலக்கிய ஆன்மிகச் சொற்பொழிவுகளுக்காக தொடர்ச்சியாக அழைக்கப்பட்டு வருபவர்.

தனது நாவன்மையின் சிறப்பால் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் எண்பத்தைந்திற்கும் மேற்பட்ட விருதுகளை இதுவரை பெற்றுள்ளார். இவரது பணிகளுக்காக இலங்கையின் புகழ்பூத்த கல்லூரியாகிய யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி தான் வழங்கிய முதலாவது "வாழ்நாள் சாதனையாளர் விருது" இனை தமிழருவி சிவகுமாரனுக்கு வழங்கி தனது பழைய மாணவனைச் சிறப்பித்திருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.




# சம்பூரில் கையகப்படுத்தப்பட்ட காணிகளை விடுவிக்கக் கோரி திருமலையில் கவனவீர்ப்பு

திருகோணமலை மூதூர் பிரதேச செயலகப் பகுதிக்கு உட்பட்ட சம்பூர் பகுதியில் கையகப்படுத்தப்பட்ட காணிகளை விடுவிக்கக் கோரி கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று நேற்று திருகோணமலையில் உள்ள கிழக்கு ஆளுனர் செயலகம் முன்பாக இடம் பெற்றது.

சம்பூரில் அமையவுள்ள சூரிய மின் சக்தி நிலையம், விதுர கடற்படை முகாம் போன்றவற்றுக்காக அபகரிக்கப் பட்ட காணிகள் உள்ளிட்டவற்றை மக்களுக்க. மீள வழங்க வேண்டும் எனக் கோரிய போராட்டம் இடம் பெற்றுள் ளது.

இதனை திருகோணமலை நில மீட்புக்கான வலையமைப் பினர் ஏற்பாடு செய்தனர்.

“பறிக்காதே! பறிக்காதே! வாழ்வாதார நிலங்களைப் பறிக்காதே!“ ,“உயிர் வாழும் உரிமையை உறுதிப்படுத்த எமது நிலத்தை எமக்கு வழங்கு!” – போன்ற பல வாசகங்கள் கொண்ட பதாகைகளை ஏந்தியவாறு அவர்கள் போராட்டத் தில் ஈடுபட்டனர்.

இதன் போது ஆளுனரின் செயலகத்தில் உள்ள அலுவல ரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் சம்பூரில் அமை யவுள்ள சூரிய மின் சக்திநிலையம் தொடர்பில் பிரதமர் நரேந்திர மோடி கொழும்புக்கு வருகை தரவுள்ள நிலையில் இந்த கவனவீர்ப்பு இடம் பெற்றுள்ளது.

சூரிய மின் சக்திநிலையத் திட்டம் தொடர்பான அங்கு ரார்ப்பண நிகழ்வில் இந்தியப் பிரதமர் நிகழ் நிலையில் கலந்து கொள்ளவுள்ளார் எனத் தெரிகின்றது.












# உள்ளூராட்சித் தேர்தல்கள் தொடர்பில் திருமலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் மாவட்டக் கலந்துரையாடல்

(ஏ.எச்.ஹஸ்பர்)

உள்ளூராட்சித் தேர்தல்களில் திருகோணமலை மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிட இருக்கும் அனைத்து வேட்பாளர்களுடனான சந்திப்பு நேற்று திருகோணமலை நகர சபை மண்டபத்தில் இடம் பெற்றது.

இதன் போது கட்சியின் அடுத்த கட்ட நகர்வுகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது. இதன் போது கட்சியின் தவிசாளரும் முன்னாள் அமைச்சருமான வஜிர அபேவர்த்தன, பொதுச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான தலதா அத்துக்கோறளை, பிரதித் தலைவரும் மூதூர் தொகுதி அமைப்பாளரும் முன்னாள் பிரதி அமைச்சருமான அப்துல்லா மஹ்ரூப் ஆகியோர் பங்குபற்றினர்.













# உள்ளூராட்சி மன்றத் தேர்தல்: 527 முறைப்பாடுகள் பதிவு




உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் கடந்த 20 ஆம் திகதியிலிருந்து நேற்று வரை 527 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 4 முறைப்பாடுகளும், சட்டத்தை மீறியமை தொடர்பில் 492 முறைப்பாடுகளும் வேறு குற்றங்கள் தொடர்பில் 29 முறைப்பாடுகளும் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

அத்துடன், கடந்த 24 மணித்தியாலங்களில் மாத்திரம் 71 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கிடைக்கப்பெற்றுள்ள மொத்த முறைப்பாடுகளில் 482 முறைப்பாடுகள் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன எனவும் 45 முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.




# உள்ளூராட்சி தேர்தலுக்கான திகதியில் மாற்றமில்லை



உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைபெறும் திகதியில் எந்தவித மாற்றமும் இல்லை எனத் தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் ஆர். எம். ஏ. எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவில் கருத்துரைத்த அவர் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வாக்குச்சீட்டுக்களை அச்சிடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்குத் தேவையான அனைத்து பணிகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர். எம். ஏ. எல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

# யோஷித, டேசி ஃபொரஸ்டுக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல்





முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷவின் மகன் யோஷித ராஜபக் ஷ மற்றும் அவரின் பாட்டியான டேஸி ஃபொரஸ்ட் ஆகியோருக்கு எதிராக கொழும்பு பிரதம மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய பட்டபெந்திகே முன்னிலையில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டதை அடுத்து தலா 5 லட்சம் ரூபா பெறுமதியான 2 சரீரப்பிணைகளில் அவர்களை விடுவிப்பதற்கு மேல்நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டார்.

நிதி தூய்தாக்கல் சட்டத்தின் கீழ் இருவருக்கும் எதிராக சட்ட மா அதிபரால் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

சட்டவிரோதமாக ஈட்டப்பட்ட பணத்தை பயன்படுத்தி சொத்துக்களை கொள்வனவு செய்தமை உள்ளிட்ட 3 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்தன.

# ஏழு லட்சத்தைக் கடந்தது சுற்றுலா பயணிகள் வருகை



இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 722,276 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர் என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

கடந்த மார்ச் மாதத்தில் மாத்திரம் 229,298 சுற்றுலாப்பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என தரவுகள் தெரிவிக்கின்றன.

அவர்களில் அதிகளவானோர் இந்தியாவில் இருந்து வந்ததுடன் அந்த எண்ணிக்கை 39,212 ஆகும்.

அத்துடன், ரஷ்யாவில் இருந்து 29,177 சுற்றுலாப்பயணிகளும், பிரித்தானியாவில் இருந்து 22,447 சுற்றுலாப்பயணிகளும், ஜேர்மனியில் இருந்து 17, 918 சுற்றுலாப்பயணிகளும் இலங்கைக்கு வந்துள்ளனர்.

இதனிடையே, சீனா, அவுஸ்திரேலியா, போர்த்துக்கல் போன்ற நாடுகளில் இருந்தும் அதிகளவான சுற்றுலாப்பயணிகள் நாட்டிற்கு வருகை தந்தனர் என சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.





# வர்த்தக நிலையங்களில் திடீர் சோதனை; காலாவதியான உணவுப் பொருள்கள் மீட்பு

**(பா.சதீசன்)**

உடையார்கட்டு பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களில் திடீரென மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையில் கைப்பற்றப்பட்ட காலாவதியான உணவு பொருள்கள் உரிமையாளரின் அனுமதியுடன் எரித்து அழிக்கப்பட்டுள்ளன.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட உடையார்கட்டு பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்களில் புதுக்குடியிருப்பு பிராந்திய சுகாதார சேவை பணிமனையின் வைத்திய அதிகாரி பி.சத்தியரூபன் தலைமையில் இந்த சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

சோதனை நடவடிக்கையில் மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் ரதன், மற்றும் விசுவமடு சுகாதார பரிசோதகர் சந்திரமோகன், உடையார்கட்டு பொது சுகாதார பரிசோதகர் பிரதாஷ், வள்ளிபுனம் பொது சுகாதார பரிசோதகர் றொஜிஷ்ரன், கோம்பாவில் பொது சுகாதார பரிசோதகர் சுரேஸ் ஆனந்தன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.






# தமிழக மீனவர்கள் வாழ்வில் ஒளியேற்றுங்கள்; பிரதமர் மோடியை வலியுறுத்துகிறார் விஜய்



கடந்த பத்து ஆண்டுகளுக்கும் மேலாக ஒன்றிய அரசின் ஆட்சி அதிகாரத்தில் இருக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசு, கச்சதீவு மற்றும் தமிழக மீனவர்கள் விவகாரத்தில் பாரபட்சத்துடன் பாராமுகமாகவே இருக்கிறது என தமிழக வெற்றிக் கழகம் கட்சியின் தலைவர் விஜய் விமர்சித்துள்ளார்.

மேலும், பிரதமர் மோடியின் இலங்கைப் பயணம், தமிழக மீனவர்கள் மற்றும் இலங்கைத் தமிழர்கள் வாழ்வில் ஒளியேற்றுவதாக மட்டுமே இருக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“ஐ.நா.வின் கடல்சார் சட்டப் பிரகடனத்தை இலங்கை அரசு எப்போதும் மதித்துக் கடைப்பிடிக்க வேண்டும். மீனவர்களின் உயிரையும் உணர்வையும் பாதுகாப்பதே ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் தலையாய கடமை. மீனவர்கள் நலன் மற்றும் கச்சதீவு சார்ந்த தமிழக வெற்றிக் கழகப் பொதுக்குழுத் தீர்மானம் தந்த அழுத்தம், தமிழ்நாடு அரசைத் தமிழக வெற்றிக் கழகத்தின் நிலைப்பாடான கச்சதீவு மீட்பு மற்றும் மீனவர் பாதுகாப்பு நிலைப்பாடு நோக்கி நகர வைத்துள்ளது.

1974 இல் கச்சதீவு கைவிட்டுப் போகக் காரணம், ஆட்சி அதிகாரப் பசி கொண்ட அன்றைய ஆளும்கட்சியான திமுக தான். 1999 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை ஒன்றிய அரசுகள் இயங்கியதே தி.மு.கவின் தயவினால்தான். அத்தகைய நிலையில், அப்போதெல்லாம் கச்சதீவு விவகாரத்தைக் கண்டுகொள்ளாமல் விட்டுவிட்டு, இப்போது மட்டும் தனித் தீர்மானம் என்ற கண்துடைப்பு நாடகம் ஏன்?

இந்தக் கேள்வியே தமிழக மக்களிடமும் எழுந்துள்ளது. அன்று முதல் இன்றுவரை ஒன்றிய அரசுக்கு, வாஞ்சையோடு வருடிக் கொடுத்து, மறைமுக அன்பை வெளிப்படுத்தும் கடிதம் எழுதும் கபட நாடகம் மட்டுமே இந்த வெற்று விளம்பர மாடல் தி.மு.க. அரசின் மாயாஜால வித்தை.

அதிகார மையமாக இருக்கும்போதெல்லாம் கை விட்டுவிட்டு, 2026 சட்டமன்றத் தேர்தல் நெருங்குவதால், இப்போது தனித் தீர்மானம் இயற்றும் கபட நாடகத் தி.மு.க. அரசின் அந்தர் பல்டி அரசியலைத் தமிழக வெற்றிக் கழகம் கடுமையாகக் கண்டிக்கிறது. இலங்கைக் கடற்படையின் தாக்குதலால் தமிழக மீனவர்கள் இதுவரை 800 இற்கும் அதிகமானோர் உயிர் இழந்துள்ளனர். அவர்களின் உடைமைகளும் வாழ்வாதாரமும் பறிக்கப் பட்டுவிட்டன.

குஜராத் போன்ற மற்ற மாநில மீனவர்களுக்காக மட்டும் பாதுகாப்பாக இருக்கும் ஒன்றிய அரசு, எங்கள் தமிழக மீனவர்களை மட்டும் கை விடுவது ஏன்? கடந்த பத்து ஆண்டுகளுக்கும் மேலாக ஒன்றிய அரசின் ஆட்சி அதிகாரத்தில் இருக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசு, கச்சதீவு மற்றும் தமிழக மீனவர்கள் விவகாரத்தில் பாரபட்சத்துடன் பாராமுகமாகவே இருக்கிறது.

எப்போதும் மீனவ நண்பனாகவே, உண்மையான உறுதியுடனும் உணர்வுடனும் நிற்கும் தமிழக வெற்றிக் கழகம், ஒன்றிய பா.ஜ.க. அரசின் இந்தப் போக்கைத் தீர்க்கமாகக் கண்டிக்கிறது. கச்சதீவு மீண்டும் நமது நாட்டுக்குச் சொந்தமாவது மட்டுமே தமிழக மீனவர் பிரச்சினைக்கு ஒரே பரிகாரம் மற்றும் தீர்வு. நிரந்தரத் தீர்வை எட்டும் வரை, இடைக்காலத் தீர்வாக 99 வருடக் குத்தகையாகக் கச்சதீவைப் பெற வேண்டும். இதற்கான ஒப்பந்தத்தை ஒன்றிய அரசு எவ்விதச் சமரசமும் இன்றி நிறைவேற்ற வேண்டும். ஒன்றிய பிரதமர் மோடி, கட்டாயமாக இலங்கை அரசிடம் இதை வலியுறுத்திப் பெற வேண்டும்.

இலங்கைத் தமிழர்களின் வாழ்வும் பாதுகாப்பும் அமைதியும் நிம்மதியும் நிரந்தரமானதாக இருக்க, பொது வாக்கெடுப்பு மட்டுமே ஒரே தீர்வு. நம் கழகத்தின் பொதுக்குழுத் தீர்மானமும், தீர்க்கமான நிலைப்பாடும் பொது வாக்கெடுப்பே. இந்நிலையை நோக்கி நகர, சர்வதேசச் சமூகத்தை ஒன்றிய அரசு வலியுறுத்த வேண்டும். போர்க் குற்றங்களுக்காகக் கண்டிப்பதோடு, நடுநிலையான பொது வாக்கெடுப்பு நடத்த, இலங்கை அரசுக்கு ஒன்றிய பிரதமர், நேரடியான அரசியல் அழுத்தம் கொடுக்க வேண்டும்.

இலங்கை செல்லும் நம் ஒன்றிய பிரதமர், “கச்சதீவு இந்தியாவின் உரிமை நிலம்“ என்ற பயணத் திட்டத்தை முதன்மையாக வடிவமைக்க வேண்டும். நமது மீனவர்களின் துயர் நீங்கும் நாள் வெகுதொலைவில் இல்லை என்ற விதத்தில் பேச்சுவார்த்தையை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஒன்றிய பிரதமரின் இந்த இலங்கைப் பயணம், தமிழக மீனவர்கள் மற்றும் இலங்கைத் தமிழர்கள் வாழ்வில் ஒளியேற்றுவதாக மட்டுமே இருக்க வேண்டும். தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பாக, சமரசமின்றி இவை அனைத்தையும் வலியுறுத்துகிறேன்.” என்று குறிப்பிட்டுள்ளார்.

# பிரபல தென்னிந்திய நடிகர் ரவிக்குமார் காலமானார்





தென்னிந்திய நடிகர் ரவிக்குமார் தனது 71 ஆவது வயதில் நேற்று காலமானார்.

புற்றுநோயால் பாதிக்கப்பட்டு சென்னையில் உள்ள தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், நேற்று காலை அவர் காலமானார் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

வளசரவாக்கத்தில் உள்ள அவரது இல்லத்தில் உடல் அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மலையாளத்தில் பல படங்களில் கதாநாயகனாகவும், குணச்சித்திர வேடங்களிலும் ரவிக்குமார் நடித்திருந்தார்.

தொடர்ந்து தமிழில் பாலசந்தர் இயக்கிய “அவர்கள்” படத்தின் மூலம் கமல்ஹாசன், ரஜினிகாந்த், சுஜாதா ஆகியோர் உடன் இணைந்து நடித்து தமிழில் நடிகராக அறிமுகமானார்.

திரைத்துறையைச் சேர்ந்த பலரும் ரவிக்குமாரின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

# காசா மீது இஸ்ரேல் தாக்குதல்; 50 பாலஸ்தீனர்கள் உயிரிழப்பு





காசா மீது இஸ்ரேல் இராணுவம் நடத்திய பாரிய தாக்குதலில் கர்ப்பிணி பெண் மற்றும் குழந்தைகள் உட்பட 50 பாலஸ்தீனர்கள் உயிரிழந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

காசா முனையில் அதிகமான இடங்களை கைப்பற்றி அதனை பாதுகாப்பு பகுதியாக அறிவிப்பதற்கு இஸ்ரேல் அரசாங்கம் தீர்மானித்துள்ளது. எனவே காசா முனையில் தாக்குதலை விரிவுபடுத்தியுள்ளதாக இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் நேற்று முன்தினம் அறிவித்துள்ளார்.

இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு காசா முனையின் கான் யூனிஸ் நகர் மீது இஸ்ரேல் கடுமையான தாக்குதலை நடத்தப்பட்டுள்ளது. இதில் 50 பாலஸ்தீனர்கள் உயிரிழந்துள்ளனர். இதில் 9 பேர் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள் என்றும் ஐந்து குழந்தைகள், நான்கு பெண்கள் அடங்குகின்றனர் என தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

ஹமாஸ்க்கு நெருக்கடி கொடுக்கும் வகையில் காசா முனை முழுவதும் புதிய பாதுகாப்பு பகுதியை இஸ்ரேல் உருவாக்கப்போவதாகவும் எனவே ரஃபா பகுதியில் இருந்து மக்கள் வெளியேறுமாறு இஸ்ரேல் அறிவித்துள்ளது.

2023 ஆம் ஆண்டு ஹமாஸ் அமைப்பினர் இஸ்ரேல் மீது நடத்திய கொடூர தாக்குதலுக்குப் பின்னர், இஸ்ரேல் காசா மீது நடத்திய தாக்குதலில் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாலஸ்தீனர்கள் இதுவரையில் உயிரிழந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



## அமெரிக்க பொருள்களுக்கு 34 வீத வரி விதித்தது சீனா

அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு 34 வீத தீர்வை வரியை விதிக்கவுள்ளதாக சீனா அறிவித்துள்ளது.

எதிர்வரும் 10 ஆம் திகதி முதல் புதிய வரித் திருத்தம் அமுலாகும் என சீன ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்க ஜனாதிபதியினால் சீன பொருட்கள் மீது விதிக்கப்பட்ட தீர்வை வரிக்கு பதிலளிக்கும் வகையில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது.

தீர்வை வரியை அதிகரிப்பது தொடர்பான அமெரிக்காவின் தீர்மானம் சர்வதேச வர்த்தக சட்டத்திற்கு முரணானது என சீன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பினால் சீனா மீது 54 வீத தீர்வை வரி விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்க பங்குச் சந்தையில் பெரும் சரிவு ஏற்பட்டது



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பினால் நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்ட பரஸ்பர வரி அதிகரிப்பை அடுத்து, 2020 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அமெரிக்காவின் பங்குச் சந்தையில் பெரும் சரிவு ஏற்பட்டுள்ளது.

அமெரிக்கப் பங்குச் சந்தையின் ஸ்ரீ 500 விலைச் சுட்டெண், 4.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது.


கொவிட் காலத்துக்குப் பின்னர் பதிவான மிகப்பெரிய வீழ்ச்சி இதுவென்று தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்காவின் பொருளாதார சுபீட்சத்தை நோக்காகக் கொண்டு இந்த வரி விதிப்பு மேற்கொள்ளப்படுவதாக டொனால்ட் ட்ரம்ப் அறிவித்திருந்தாலும், நிலைமை மாறுதலாக இருப்பதாக பொருளியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

அமெரிக்கப் பங்குச் சந்தை மாத்திரமின்றி, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஆசியப் பங்குச் சந்தைகளும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

## சென்டினல் தீவுக்குச் சென்ற அமெரிக்கர் ஒருவர் கைது





அந்தமான் – நிக்கோபார் தீவுகளில் உள்ள ஒரு தடைசெய்யப்பட்ட தீவுக்குள் சென்றதற்காக அமெரிக்காவைச் சேர்ந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மிகைலோ விக்டோரோவிச் பாலியாகோவ் என்ற 24 வயது இளைஞர், கூர்மதேரா கடற்கரையிலிருந்து அனுமதியின்றி பழங்குடி தீவான வடக்கு சென்டினல் தீவுக்குச் சென்றுள்ளார்.

இதன் போது பழங்குடி மக்களுக்கு வழங்குவதற்காகத் தேங்காயும், குளிர்பானங்களும் கொண்டு சென்றுள்ளார்.

மேற்படிஅமெரிக்கர்சென்டினல்தீவில் எந்தவொரு பழங்குடியினரையும் காணாததால் தான் கொண்டுவந்த பொருள்களைக் கடற்கரையில் வைத்துவிட்டு, கடற்கரை மண்ணை எடுத்துக் கொண்டு விமான நிலையத்திற்குச் சென்றுள்ளார்.

இந்நிலையிலேயே விமான நிலையத்தில் வைத்து அவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சென்டினல் தீவு மக்கள் வெளி ஆட்கள் தீவுக்குள் நுழைவதற்கு அனுமதிப்பதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# இன்றைய ராசி பலன்கள் - 05.04.2025




உங்கள் தினசரி செயல்களை செய்வது கடினமாக இருக்கும்.முக்கியமான முடிவுகளை இன்று எடுக்க வேண்டாம். இன்று அமைதியுடன் இருக்க வேண்டியது அவசியம்.

பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளதால் பொறுமை அவசியம். உங்கள் சகபணியாளர்களுடன் உரையாடும் பொழுது அமைதியான முறையை கடைபிடிக்க வேண்டும்.

உறவில் நல்லிணக்கத்தைப் பராமரிக்க உங்கள் துணையுடன் நட்போடு பழகுங்கள்.

பணத்தை தக்க வைத்துக்கொள்வதை கடினமாக உணர்வீர்கள். செலவுகளை முன்கூட்டியே திட்டமிடுங்கள்.

இன்று நரம்பு சம்பத்தப்பட்ட பிரச்சினைகள் காணப்படலாம். தகுந்த சிகிச்சை மேற்கொள்வது நல்லது.




சாதகமான பலன்களுக்கு உங்கள் புத்திசாலிதனத்தில் நம்பிக்கை வைத்து செயலாற்றுங்கள்.உங்களது நேர்மறையான எண்ணங்களும் தைரியமும் இதற்கு உதவும்.

உங்கள் பணி மேலதிகாரிகளால் பாராட்டப்படும். உங்களிடம் உள்ள திறமைகளை வெளிக் கொணர வேண்டும்.

உங்கள் துணையைப் புரிந்துகொண்டு அவரின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் ஏற்படும்.

உங்கள் நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். பயனுள்ள வகையில் இன்று பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று உற்சாகத்துடன் காணப்படுவீர்கள். நல்ல ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




பொழுதுபோக்கு நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் மூலம் உங்களை மகிழ்ச்சியாக வைத்திருக்க இயலும். பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமைய நீங்கள் சிறிது முயற்சி எடுக்க வேண்டும்.

பணியிடத்தில் அதிகப் பணிகள் காணப்படும். எனவே திட்டமிட்டு முறையாக பணியாற்றினால் திறமையாக செயலாற்ற முடியும்.

இன்று மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளதால் உங்கள் துணையிடம் பேசும் போது பொறுமை அவசியம்.

இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். உங்களிடம் பணம் இருந்தாலும் திருப்திகரமான நிலை இருக்காது.

செரிமானக் கோளாறு பிரச்சினைகள் ஏற்படலாம்.




இன்று பொறுமையுடன் இருக்க வேண்டும்.உங்கள் உணர்வுகளை கட்டுப்படுத்த வேண்டும். தியானம் அல்லது யோகா மேற்கொள்வதன் மூலம் ஆறுதல் கிடைக்கும்.

உங்கள் பணிகளைக் கையாள்வது கடினம்.அதிகரிக்கும் வேலை காரணமாக தவறுகள் நேரலாம்.

உங்கள் துணையுடன் சகஜமாகப் பேசுவதன் மூலம் உறவில் திருப்தி நிலவும்.

இன்று பணத்தை சரியான முறையில் பயன்படுத்த இயலாது. பணம் கரைந்து விடும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

இன்று கவலையின் காரணமாக பதற்றமாகக் காணப்படுவீர்கள்.




மனதில் உள்ள குழப்பங்கள் காரணமாக மேற்கொண்ட செயல்கள் தாமதமாக முடியும்.உங்கள் அஜாக்கிரதை காரணமாக விலைமதிப்பு மிக்க பொருளை இழக்க நேரும்.

இன்று பயணங்கள் ஏற்படலாம். அதனால் பதட்டம் காணப்படும்.இந்த பயணம் உங்களுக்கு மகிழ்ச்சியளிப்பதாக இருக்காது.

இன்று விஷயங்களை சகஜமாக எடுத்துக் கொள்ளுங்கள். பேச்சுவார்த்தை மூலம் கருத்து வேறுபாடுகளை தீர்க்க முடியும்.

இன்று அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக தேவையில்லாத செலவுகளை எதிர்கொள்ள நேரும். இது தவிர்க்க இயலாதது.

கால்கள் மற்றும் தோள்களில் வலிகள் காணப்படும்.




ஆன்மீகம் மற்றும் அது சம்பந்தமான ஈடுபாடு மகிழ்ச்சியை அளிக்கும். அனுபவம் மூலம் இன்று பாடம் கற்கும் வாய்ப்பு ஏற்படும்.

உங்கள் பணிகளை குறிப்பிட்ட நேரத்துக்கு முன் உங்களால் செய்ய இயலும்.இதன் மூலம் உங்கள் மேலதிகாரிகளின் நம்பிக்கையைப் பெறுவீர்கள்.

இன்று உங்கள் துணையிடம் இனிமையான விஷயங்களை பகிர்ந்து கொள்வீர்கள். இருவரும் பொருத்தமான ஜோடிகளாகத் திகழ்வீர்கள்.

இன்று பணம் மிகுதியாக காணப்படும். வங்கியிருப்பு அதிகரிக்க முடியும். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

இன்று முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




நீங்கள் விரைவாக செயலாற்றி உங்கள் பொறுப்புகளை எளிதில் முடிப்பீர்கள்.உங்கள் கனவுகள் நனவாகும்.உங்களின் நேர்மறையான மனப்பாங்கின் மூலம் உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள்.

நீங்கள் ஆற்றும் பணியின் மூலம் நற்பலன்கள் கிடைக்கும்.உங்களிடம் காணப்படும் உற்சாகம் காரணமாக நீங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வதன் மூலம் அவரை நன்கு புரிந்து கொள்ள முடியும். இதனால் மகிழ்ச்சி ஏற்படும்.

எதிர்பாராத பண வருவாய் காணப்படும். இதனால் மிகுந்த திருப்தி உங்களுக்கு ஏற்படும்.

இன்று உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக சௌகரியமாகவும் ஆரோக்கியமாகவும் காணப்படுவீர்கள்.




நீங்கள் உங்கள் முயற்சியின் மீது நம்பிக்கை வைத்து உங்கள் திறமைகளை மேம்படுத்துவதன் மூலம் சாதகமான பலன்களைப் பெறலாம்.

உங்கள் பணிக்கு உங்கள் மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்கவில்லை என்று நீங்கள் எண்ணுவீர்கள்.இதனால் உங்கள் தன்னம்பிக்கை குறையும்.குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாது.

உங்கள் துணையிடம் உங்கள் மனதில் உள்ள பதற்றத்தையும் ஏமாற்றத்தையும் காண்பிப்பீர்கள்.

பண இழப்பு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இருப்பதால் இன்று பணத்தை மிகவும் கவனமாக கையாள வேண்டும். பணத்தை திட்டமிட்டு செலவு செய்வது நல்லது.

இன்று கால் வலி மற்றும் தோல் எரிச்சல் போன்ற உபாதைகளுக்கு ஆளாவீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 05.04.2025




இன்று ஏமாற்றங்கள் காணப்படுவதால் இன்றைய நாளை திட்டமிட வேண்டியது அவசியம்.பொறுமையாக இருந்து மிடுக்குடன் செயல்பட வேண்டும்.இன்று முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

இன்று பணியில் தவறுகள் செய்ய வாய்ப்புள்ளதால் பணிகளைக் கையாளும்பொழுது கவனம் தேவை. எனவே உங்கள் பணிகளை திட்டமிட்டு செய்ய வேண்டும்.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இடையே வாய் சண்டை நடக்கலாம். அதனால் உங்கள் துணையுடன் பேசுவதை தவிர்ப்பது நல்லது.

இன்று அதிக செலவுகள் காணப்படும். அது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும். நஷ்டத்தை தவிர்க்க உங்கள் நிதிநிலையை கண்காணிக்கவும்.




நீங்கள் நம்பிக்கையுடன் காணப்படுவீர்கள்.உங்களிடம் காணப்படும் தன்னம்பிக்கை காரணமாக கடினமான பணிகளையும் எளிதாக முடிப்பீர்கள்.

உங்கள் பணிகளை திறமையுடன் மேற்கொள்வதில் நேர்மையாக இருப்பீர்கள்.உங்கள் மேலதிகாரிகளின் நன்மதிப்பை சம்பாதிப்பீர்கள்.

நீங்கள் உங்கள் துணையுடன் அமைதியோடு பேசுவீர்கள். உங்களின் மனம் திறந்த இந்த அணுகுமுறை உறவின் பிணைப்பை வலுப்படுத்தும்.

உங்களிடம் உள்ள பணம் உங்களுக்கு போதுமானதாக இருக்கும். அதை உங்கள் குடும்பம் மற்றும் நெருங்கிய உறவுகளுடன் வெளியிடம் செல்லுதல் போன்ற பயனுள்ள விஷயங்களுக்காக செலவு செய்வீர்கள்.




உங்களுக்கு நன்மை பயக்கும் முக்கியமான முடிவுகளை இன்று எடுப்பீர்கள்.பொதுவாக திருப்தியுடன் காணப்படுவீர்கள்.

உங்களால் சுமுகமாக பணியாற்ற இயலும்.உங்கள் மேலதிகாரிகளின் நன்மதிப்பை பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் சம நிலையோடு பழகுவீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

உங்களிடம் காணப்படும் பணம் உங்களுக்கு போதுமானதாக இருக்கும். இன்று பணம் சேமிப்பதற்கான வாய்ப்பு உள்ளது.

இன்று ஆரோக்கியத்துடனும் திருப்தியுடனும் காணப்படுவீர்கள்.




தியானம் மூலம் மன அமைதியை பெறலாம். எதிர்மறை எண்ணங்களை தவிர்க்க வேண்டும். பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமைய திட்டமிடல் அவசியம்.

இன்று உங்கள் போக்கில் அனுசரனை கடைபிடிப்பதன் மூலம் நீங்கள் மகிழ்ச்சியான தருணங்களைக் காணலாம்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படாமல் சகஜமாக நடந்து கொள்ளுங்கள்.

நீங்கள் எதிர்பாராதவிதமாக பணத்தை இழக்க நேரலாம். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.

இன்று உங்கள் தன்னம்பிக்கை குறைந்து காணப்படும். உடற்பயிற்சி செய்து புத்துணர்வு பெறலாம். இதன் மூலம் நீங்கள் ஆரோக்கியமாக இருக்கலாம்.




# நிவாரண பொதியை தற்காலிகமாக நிறுத்தி வைக்குமாறு அறிவித்தல்

புத்தாண்டை முன்னிட்டு அரசாங்கத்தினால் நிவாரண முறையில் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்த நிவாரண பொதியை தற்காலிகமாக நிறுத்தி வைக்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது .

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்குப் பிறகு குறித்த நிவாரண பொதியை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழு எழுத்துப்பூர்வமாக அறிவித்துள்ளது.

இந்த நிவாரண பொதிகளை ஏப்ரல் முதலாம் திகதி முதல் 13 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் லங்கா சதொசா மற்றும் கூட்டுறவு விற்பனை நிலையங்கள் மூலம் விநியோகிக்க திட்டமிடப்பட்டிருந்தது.

அதன்படி , அஸ்வெசும நலன்புரி உதவிகளுக்காக புதிய விண்ணப்பங்களை சமர்ப்பித்த 8 லட்சம் பேருக்கு, 5,000 ரூபா பெறுமதியான அத்தியாவசிய நிவாரணப் பொதியை 2,500 ரூபா என்ற நிவாரண விலையில் வழங்க அரசாங்கம் திட்டமிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.